# அருள் ஒளி



திருமஞ்சம் வெள்ளோட்ட விழா
சிறப்பு மலர்



திருமஞ்ச மாதிரிப்படம்

ஆவணி
இதழ்

70
மலர்

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை
2009

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் புதிய திருமஞ்சத்துக்கான பவளக்கால் நாட்டும் வைபவம்






பவளக்காலை நாட்டி வைப்பவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள்
(அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச்செயலாளர்)



உ

# அருள் ஒளி



(மாதாந்த சஞ்சிகை)
ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்
2009 விரோதி வருடம் ஆவணி

மலர் 70

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74 NEWS/2006Y

## பேசாப் பொருளைப் பேச வைக்கும் சிற்பக் கலைஞர்கள்

கலைஞர்கள் கடவுளின் திருவருளால் படைக்கப்படுகிறார்கள். எல்லா மனிதர்களாலும் உண்ண முடியும், உறங்க முடியும் சிந்திக்கமுடியும் சிலரால் மட்டுமே சிந்தனைகளை பிறர் கண்டு வியக்கும் வண்ணம் படைக்க முடிகிறது. எல்லாராலும் இசையோடு பாடமுடிவதில்லை. ஓவியம் வரைய சிலரால் மட்டும் முடிகிறது. ஆடல், பாடல், சிற்பம், ஓவியம், காவியம், நாவன்மை, போன்ற கலைகள் படைக்கும் ஆற்றல் சிலருக்கு இறைவன் கொடுத்த கொடை. இந்துப் பண்பாட்டில் கலையைக் கடவுளின் வடிவங்களாகவும், கலைஞர்களை கடவுளின் விசேட படைப்பாகவும் கொள்கின்ற மரபு புராணங்கள் வாயிலாக அறியப்பட்டுள்ளது. கந்தபுராணம் மரத்திலான சிற்பங்களை உருவாக்குவதற்கு தேவதச்சர்களை இறைவன் படைத்ததாக கூறுகின்றது. சைவ மக்களின் திருக்கோவில்களில் கடவுளின் திருவடிவங்களை திருவருட் காட்சிகளை உணர்வுபூர்வமாக வழிபாடு செய்வதற்கு வித்திடுபவர்களில் சிற்பாசாரிகளின் பங்கு மெச்சத்தக்கது. சிற்பசாஸ்திர நூல்கள் கற்று பிறவி தந்த இயற்கையுடன் சிற்பக் கலைஞர்கள் படைத்த விலைமதிப்பற்ற படைப்புக்கள் பெருமைக்குரியன. எமது சமயச் செய்திகளை வரலாறுகளை சமய தத்துவங்களை காலங்காலமாக தேர், மஞ்சம், கைலாசவாகனம், சப்பறம், வாகனங்கள், திருவாசி, சிகரம், மணவறை, கேடகம், பல்லக்கு, பீடம் எனப்பல சிற்பம் நிறைந்த இறைவழிபாட்டுடன் தொடர்புபட்ட அம்சங்களை சிற்பிகள் உருவாக்கி வருகின்றனர். இவை சாதாரண விடயமல்ல. அளவுப்

பிரமாணம் முதல் கேத்திர கணித பொறிமுறை விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய பாரம்பரிய சிற்ப விதானங்கள் பேணப்பட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும். ஒரு சிற்ப உருவத்தை உருவாக்குவதற்கு எத்தனை தூரம் வியர்வை சிந்தி உழைக்க வேண்டும் என்பது அனைவருக்கும் விளங்குவதில்லை. வெறுமனே தேர், மஞ்சம் யானும் வடம்பிடிக்க வாய்ப்புக் கிட்டியது என்ற உணர்வோடு மட்டும் நின்றுவிடுகிறார்கள். ஒரு சிலர் ஆ... எப்படிக் கற்பனை இந்தச் சிற்பிக்கு ஏற்பட்டது. ஒரே உடம்பில் இரு மிருகங்களின் தலைகள், யானையின் கால்களுக்குள் அகப்படாது பாம்பு நின்று படம் விரித்து ஆடும் காட்சி, குகை வெளியே எட்டிப் பார்க்கும் உருவம், அதன் அருகே அச்சத்தோடு பார்க்கும் பிறிதொரு உருவம், சிவனின் நூற்றியெட்டுத் தாண்டவம் இப்படி எத்தனை எத்தனை...... இவையெல்லாம் சிற்பக் கலைஞன் தன் ஆற்றலால் பேசாப் பொருளாகிய மரத்தை பேச வைப்பதுபோல் ஆக்கும் திறன். இப்பெருங்கலை ஈழத்திரு நாட்டில் நின்று நிலைப்பதற்கு வித்திட்ட சைவசமயம் சார்ந்த அடியவர்கள் மெச்சத்தக்கவர்கள். கலைஞர்களை காலங்காலமாக ஊக்குவித்தனர். விழா எடுத்துச் சிற்பக் கலைஞர்களை கௌரவித்தனர். இறைவனை இருத்திப் பவனிவரமுதல் உருவாக்கிய சிற்பியை வெள்ளோட்டம் என்ற பெயரில் மதிப்புக் கொடுத்து வீதியுலாக் கொண்டுவந்தனர். இவ்வாறு மதிப்புக்கொடுக்கப்பட்ட சிற்பியால் உருவாக்கப்பட்ட தேரில் கடவுள் வரும்போது பல்லாயிரம் பக்தர்கள் ஒன்று சேருகின்றனர். இதுவும் அற்புதமே. இத்தகைய சிற்பக் கலைஞர்கள் உருவாக்கிய படைப்புக்களால் எத்தனை ஆயிரம்பேர் கூடிக் கைகூப்பி வழிபட வழி செய்கின்றது. பொறுமையாக நிதானமாக சிந்திப்போமானால் சிற்பிகளை இறைவன் அனுப்பினார் என்பது தெளிவு.

மிக அற்புதமான கலைப்படைப்புக்கள் கோவில்கள் தோறும் உண்டு. அவற்றின் பெறுமதியை உணர்ந்து பாதுகாக்க வேண்டும். சமீபத்தில் பலர் கவலைப்பட்டனர். கோவில் பழைய சிற்பங்கள், பழைய வாகனங்கள், பாவைகள் வேலைப்பாடுடைய நிலைகள் குறைந்த விலையில் தென் இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு மறைவாக விற்கப்படுவதாக. அவை நிறுத்தப்படவேண்டும். இத்தகைய கலைப்படைப்புக்கள் காலம் முழுவதும் காப்பாற்றப்பட வேண்டியன என்பதை அனைவரும் உணரவேண்டும். கோவில்கள்தோறும் படைக்கப்பட்ட சிற்பங்களை ஒருகணம் உற்று நோக்குங்கள் இவற்றை சாதாரணமாக படைக்க இயலுமா? "கலையின்பமே நிலையின்பம்" இதனைக் கருத்திற் கொண்டு கலைஞர்களையும் அவர்களின் படைப்புக்களையும் கௌரவித்துக் காப்போமாக.

- ஆசிரியர்

தெல்லிப்பழை துர்க்கை அம்மனின்
புதிதாக அமைக்கப் பெற்ற அழகிய திருமஞ்சம்



அழகிய மஞ்சத்தில் அம்பாள் வீதியுலா...



## மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில்
## பிரதமகுரு
## மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
வழங்கிய

# ஆசிச்செய்தி

நவரஸ சிருங்காரங்களின் மூலதனங்களையும் முறையாகவே கிரஹித்துக் கொண்ட 'ரிஷி என்பவர் பிரபஞ்ச ஷேமங்கட்காக அவை அவசியம் தேவைப்பட வேண்டும் என யசுர் வேத காலங்களில் இடம்பெற்ற மஹாயாகங்களின்போது வசிட்ட முனிவரது சிஷ்யனான ரிஷி வெளிப்படுத்தியதனால் வசிஷ்டர் ரிஷிக்கு "ரிஷ்யசிருங்கர்" என நாமகரணஞ் சூட்டி அவர் தம் வழியில் செயற்படுமாறும் அனுமதித்தார். இந்த ரிஷ்யசிருங்கர்தான் ரதங்களையும், மஞ்ச ஊர்திகளையும் துணிந்து உலகிற்குத் தந்த மகானாவார்.

பகலும் இரவும் இணைந்து ஓர் முழுநாளாக அமையும்போது பகல் வேளைகளிலும், இரவு வேளைகளிலும் உயிர்கள் வித்யாசமான செயற்பாடுகளால் அகமகிழ்ந்து ஓர் முழு நாளையும் ஆனந்த பரவசமாக அமைக்க முற்பட்டவேளை அவ்வுயிர்கள் பக்தி மார்க்கங்களிலும் மனதை ஏவவிட்டனர். பகலுக்கும், இரவிற்கும் உயிர்கட்கோர் தேவையை சிருஷ்டிக்கும் பொருட்டு ஆலோசனையில் அமைந்த ரிஷ்ய சிருங்கர், உதயம் முதல் மாலை வரை ரதோற்சவத்தையும், மாலை முதல் உதயம் வரை மஞ்சோற்ஸவத்தையும் சிருஷ்டித்தார். ரத செயற்பாடு பகலில் இடம் பெற்ற வரலாறு தசரதரது புத்ரகாமேஷ்டி யாகத்தின் போதும், மஞ்ச ஊர்தியின் செயற்பாடு யாகங்கள் ஆரம்பமாகும் முன் இடம்பெறும் 'சிருங்கார சாரோதய' த்தின்போதும் இடம் பெற்றுள்ளன. மாலைப் பொழுதினில் மலைச் சாரல்களிலும் மலையடி வாரங்களிலும், ரிஷி வர்க்கத்தினரும், ரிஷி பத்தினிகளோடு இணைந்த தேவ கன்னிகைகளும், ஏனையோரும், ஆட்டம், பாட்டம், நடனம், குழலிசை, உடுக்குபேரீ, சங்கு, குழல் இன்னுமிருக்கும் வாத்தியங்களோடு இந்திரனையும், உருத்திரனையும் பஞ்சபூதங்களது தெய்வங்களையும் நினைந்து ஆராதித்து பிரார்த்தித்து தத்தம் வேண்டுதல்களைப் பெற்றனர். இதனையே "சிருங்கார சாரோதய விழா" எனப்பட்டது.

புஷ்பங்கள் பல்வேறு யக்ஜ பத்திரத்துளிர்கள், தெற்பைப்புல், தாழை, பூகீயிலை கதலி போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்ட மூங்கிற் கோல்களால் உருவகம் பெற்ற மஞ்சம்தான் முதன் முதலில் வேத காலங்களில் எழுந்தன. மருதமர உருளைகள் இணைக்கப்பட்ட பார் அச்சின்மேல் பிரம்பதேவர் சாரதீயம் செய்ய மேல்தள ஆசனத்தில் ஆஸ்தான பிரபுவாக மன்மதன் ரதி வீற்றிருக்க யாககுதிரைகள் ஊர்தியை அசைத்துவர, சுற்றிவர தேவ கன்னிகைகளும், ரிஷி பத்தினிகளும் ஆடிப்பாடி வர, இவற்றிற்கு இணையாக முரசு, குழலிசை போன்ற வாத்தியங்கள் வேத கீதங்களுக்கு துணைபோக, மகாயாகசாலைப் பிரதக்ஷிணம் நடந்தன. ஏழாம் நூற்றாண்டில் மாவையாலயம் நிறுவிய மாருதப்புரவல்லியால் அழைத்து வரப்பட்ட தீஷிதர் பெரிய மனத்துள்ளார் கொண்டுவந்ததோர் பழைய ஓலைச் சுவடியில் இவை வர்ணிக்கப்பட்டது. சேர். பி. இராமநாதன், திரு. சு.

நடேசபிள்ளை ஆகியோர் கூட இவ் ஏட்டுச் சுவடிகளை பின்னாட்களில் ஆராய்ந்துமுள்ளனர். இவ் ஏட்டுச்சுவடியோடு இணைந்த ஆயர்வேத தரவுகள், சோதிடம், சிற்பம் போன்ற சுவடிகளை மிகவும் பாதுகாத்து வைக்க வேண்டியது அவசியம் என்பதற்காக திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் செம்பிலான ஓர் குடலையை வழங்கி கவனமாகப் பேணுமாறும் வேண்டினார். 16ஆம் நூற்றாண்டில் இங்கு ஆக்கிரமிப்பாளராக நுழைந்த நாடுபிடிகாரரிடம் தப்பிவந்த இந்த ஏட்டுக்குடலை 1990ஆம் ஆண்டில் இடம்பெற்ற அநாகரிகமான கலவரங்களால் நாமும் எமது கலை, கலாசாரங்களையும் துறந்துவிட்டு சடுதியாக ஆலய வளாகத்திலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலை எழுந்தது. ஆலய வளாகத்திலுள்ள கலைப் பொக்கிஷங்கள், மற்றும் பெறுமதியான திருத்தெய்வங்கள் என்பனவற்றைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தைக்கூறி எம்மை அங்கு குடியிருக்க அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு விண்ணப்பித்திருந்தோம். பதில் கோவில் வளாகம் குண்டுகளால் தகர்க்கப்பட்டது முற்றும் முழுவதும் சூறையாடப்பட்டது. அதில் இந்த மஞ்ச ஊர்தி விபரமடங்கிய ஓலைகளோடு மற்றும் நானூறு ஏட்டுச் சுவடிகள் தொலைந்தன. எடுத்துக்கொண்டுபோன ஏட்டுச் சுவடிகளை திரும்பத் தருமாறு இரந்தும் இன்றுவரை பதிலேதும் இல்லை. அதனால் மஞ்ச ஊர்தி பற்றிய இன்னுமிருக்கும் செய்திகளை உலகிற்கு தந்துதவ இயலவில்லை எனவும் யான் வருந்துகிறேன்.

வேத காலங்களில் யாகசாலை மஹாயாகங்கள்தான் மிக மிக முக்கிய ஸ்தானமாக விளங்கியது. இக்காலங்களில் கூட உற்சவ காலங்களில் யாகசாலை யாகங்கள்தான் மிக மிக முக்கிய ஸ்தானமாகும். சுற்றுப்பலியீறாக சகல நடவடிக்கைகளும் இத்தகைய உச்ஸவ யாகத்திற்கே சமர்ப்பிக்கப்படுகிறது. ஆனால் பக்தர்கள் உற்சவகால யாகங்களை கவனிப்பது குறைவாகவே தெரிகிறது.

படிப்படியாக பல்வேறு காலங்களில் தெய்வீக ஊர்திகள் வளம்பெற்று இப்போ ஆலய உற்சவ செயற்பாட்டில் இணைந்து நிற்கின்றன. இப்போ காலத்திற்குக் காலம் மஞ்ச ஊர்தியின் கட்டுமானம் விரிவடைந்தும், புதுப்புது மெருகுடன் வளர்ச்சி பெறினும், அதன் ஆத்மார்த்த தனித்துவம் மறையாது பேணப்படுகிறதை அவதானிக்காலம். அளவும் பிரமாணங்களும் அவ்வாறே கணிக்கப்படுகின்றன. பொதுவாக "விஜயரத" சாயலிற்தான் மஞ்ச ஊர்திகள் இன்று காணப்படுகின்றன.

"நாநாதுவ ஜ ஸமோபேதம் நாநாதாமை ஸ்ச சாமரை:
ஊர்த்துவ வேத்ய பரிஷ்டாந்து ஸிம்ஹஸூபாங்கிரி காஸனம்"

என்றவாறு வேதகால மஞ்சவூர்தி அலங்காரம் எவ்வாறு இணைக்கப்பட்டதோ அதே போன்று, இக்காலங்களிலும் பூகியிலை, கதலிபுஷ்பசரமாலைகள், இக்ஷாதண்டம், தெற்பைப்புல், சாமரங்கள் என்பவற்றால் அழகுபடுத்த வேதசாரங்கள் பக்தர்களிடம் மறைமுகமாக ஆற்றுப்படுத்திநிற்கின்றன. ஊர்துவ வேதிகையில் சிம்மாசனம் அமைத்து அதில் இறைவனையேற்றி வணங்கப்படுவதும் ஓர் சிறப்பம்சமாகும்.

மஞ்சவூர்திவிழாவில் இணைந்து இறைவனை அஷ்ட திக்குகளில்நின்று வழிபடுவோர்,

"தருமாத்தீ லபதே தர்மாநர்த்தார்த்தி சார்த்தமாப்நுயாத்
காமார்த்தீ லபதே காமான் மோக்ஷாத்தீ மோக்ஷமாநுயார்த்"

என்றவாறு,

அறத்தை விரும்புவோர் நல்லறங்களையும், பொருளை விரும்புவோர் பொருள் சேரும் பேற்றையும், இன்பங்களை விரும்புவோர் அவை தானாகவே வந்தடையும் இயல்புகளையும் இலைமறைமுகமாகவே இறைவன் தந்துதவுவார் என ரிஷிகளின் பிரசித்தம். ஈற்றில் வீடு பேற்றை விரும்புவோருக்கு மோக்ஷமும் இலகுவாக கிடைக்குமென அறியப்படுகிறது. மஞ்ச பவனியின்போது அஷ்டதிக்பாலகர்களது பார்வையும் மக்கள்மேல் இணையும் இணைந்து அவரவர்கள் விரும்பும் இஷ்டகாம்ய சித்திகளும் கிடைக்கும். எனவே மஞ்ச ஊர்தி திருவீதி வலம்வரும்போது அந்தந்த மூர்த்திகளிற்கான கீதங்கள், இராகங்கள் வாத்தியங்கள், பஜனைகள், பிரதக்ஷணங்கள் என்றெல்லாம் இருக்கும் தர்மசாதன சமர்ப்பணங்கள்தான் மாபெரும் பலன்களை ஞாலத்திற்கு தந்துநிற்குமென யசுர்வேதகால ரிஷிகள் அறியத் தந்துள்ளனர்.

ஆலயங்கள் மூலம்தான் அருமையான நற்தொண்டுகளாற்றும் திறனும், நல்லெண்ணங்களை ஊற்றெடுக்க வேண்டிய சக்திகளையும் மனிதன் இருதயத்தில் இணைக்க முடியும், அதனால் ஜீவ காருண்யம் வளர்ச்சி பெறும் இத்தகைய திரு செல்வங்களைப்பெற தெல்லிப்பழை துர்க்காம்பிகா ஆலயம் பெரிதும் பாடுபடுகிறது. இவை படிப்படியாக வளர்ச்சியும் பெறுகிறதை அவதானிக்கலாம். இப்போ திருமஞ்ச ஊர்தி விழாவும் இணைந்துவிட்டது. தக்கதோர் தருணத்தில், தகுந்த வேளையில், தகுதி பெற்ற சிற்பக் கலைஞர்களது ஆக்கத்தில் இம்மஞ்சம் அம்பாளின் கருணையோடு தோற்றங் கொண்டுவிட்டது. மஞ்ச ஊர்தி உற்சவம் இடம்பெறுவதும் ஓர் தவச் செயலே. பக்தர்கள் பவனியின்போது பாமாலைகளாலும், வழிபாடுகளாலும், திருநெறித் தொண்டுகளாலும் சூழலைத் தெய்வீகமாக்கி திருவருள் நிறைந்து அவை எங்கும் பரவி நிற்க உதவுவதே மாபெரும் தொண்டாகும். ஆலய நிர்வாக சபையினர் திருமஞ்ச ஊர்தி விழாவை நடாத்த துர்க்கை அம்பாளின் ஊக்க சக்தியும் திருவருளுமே துணையானது.

மஞ்சவூர்தி பவனி விழா நிறைவாகவும் அதிசக்தி வாய்ந்ததாகவும் தெய்வீக வல்லமைகளை மக்களிற்கு தந்து ஞாலத்தை இரட்சித்தருளுமாறு யானும் சர்வசக்தி ரூபியான துர்க்காம்பிகையின் பாதங்களில் மனதால் அர்ச்சித்து சகலரையும் ஆசீர்வதிக்கின்றேன்.

கலியுகம் 5111,
விரோதி ஸு ஆவணி மீ க ம் நாள்,
சோமவாரம் ஆர்த்ராநக்ஷத்திரம்,
17-08-2009.

**மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**
மாவையாதீனம்

கீரிமலை

**ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்**

ஆதீன கர்த்தா, பிரதம குரு

# சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்

வழங்கிய

# ஆசிச்செய்தி

சீரும் திருவும் நிறைந்த, எம் திருநாட்டில் உள்ள சக்தி தலங்களில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் முதன்மையானது. திருவருள் நிறைந்த தெய்வீகத் தலம். வேத ஆகம நெறிக்கும், திருமுறைக்கும் பெருமதிப்புக் கொடுக்கின்ற க்ஷேத்திரம். இத்தலத்தில் அம்பாள் வீதியுலா வருவதற்காக புதிய திருமஞ்சம் உருவாக்கப்பட்டுள்ளமை பேரானந்தத்தை தருகின்றது. சிறந்த சிற்பக் கலைஞர் திரு. செல்லையா பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்படும் திருமஞ்சம் சிறப்புப் பெறும் என்பதில் ஐயமில்லை. அம்பாளின் திருமஞ்ச உருவாக்கலில் அக்கறை கொண்ட ஆலய நிர்வாக சபையினருக்கும், விழா உபயகாரருக்கும், அடியார்களுக்கும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கீரிமலை கு. நகுலேஸ்வரக் குருக்கள்

உ

குருபாதம் துணை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

இரண்டாவது குருமகா சன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

ஈழமணித்திருநாட்டின் பெருமைக்குரிய திவ்விய திருத்தலங்களுள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கைஅம்மன் ஆலயம் சிறப்புக்குரியது. சமூகத்தேவைகளை தேவியின் பெயரால் நிறைவு செய்கின்ற பெருமைக்குரிய ஆலயமாக இவ் ஆலயம் விளங்குகின்றது. இத்திருத்தலத்தில் காலந்தோறும் திருப்பணிகள் நடைபெற்று சகல சிறப்புடனும் இவ் ஆலயம் விளங்குவதை யாவரும் அறிவர். இவ் ஆலய மகிமையை ஊர் உலகம் அறிய வைத்த பெருமை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரைச் சாரும். அவரது ஒப்பற்ற பணியைப் பேணிக் காக்கும் வகையில் ஆலயப்பணிகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறுவது பாராட்டுக்குரிய விடயமாகும். குறிப்பாக அம்பாளுக்கு புதிய திருமஞ்சம் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இளைய தலைமுறையின் உன்னத கலைஞனாக விளங்கும் திரு. செல்லையா பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்படும் திருமஞ்சம் நிறைவானதாக அமையும் என்பது எமது நம்பிக்கை. இக்கலைஞனால் உருவாக்கப்பட்ட பல தேர், திருமஞ்ச வெள்ளோட்ட விழாக்களுக்குச் செல்லும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது. பணிவும் பக்குவமும் நிறைந்த இக்கலைஞன் அம்பாளின் அருட்கடாட்சத்தால் மேலும் சிறப்படைய நல்லாசிகூறி அம்பாளின் திருமஞ்சத் திருப்பணிக்காக அயராது உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் நல்லாசியையும், வாழ்த்தையும் கூறி திருமஞ்ச வெள்ளோட்ட விழா பெருவிழாவாக அமைய திருவருளை வேண்டி அமைகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

சுவாமிகள்

உ

தெல்லிப்பழை

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

பிரதமகுரு

## சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்

வழங்கிய

# ஆசிச்செய்தி

அகில உலகநாயகியாக விளங்குகின்ற ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளினால் அமையப்பெற்றதுதான் திருமஞ்சம் ஆகும்.

தேவஸ்தான தர்மகர்த்தா, நிர்வாகசபையினர், மதிப்புக்குரிய தேவஸ்தான தலைவர் ஆகியோரின் விடா முயற்சியால் விஸ்வப்பிரம்மாவின் வழித்தோன்றலில் வந்த எமது சிற்பக் கலைஞர் செ. பாலச்சந்திரன் அவர்களால் உருவாக்கப்பட்ட திருமஞ்சம் இவ்வாண்டு மிகப் பொலிவோடு அம்பிகையின் மீளா அடியவர்களின் பெரு விருப்பால் வீதிவலம் வர இருக்கிறது.

அம்பிகையின் இப்பெரும் பணிக்கு உதவிய உபயகாரர்கள், அடியார்கள், அனைவருக்கும் ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருள் என்றும் கிடைக்கப் பிரார்த்தித்து நல்லாசிகள் வழங்கி வாழ்த்துவோமாக.

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

வா. அகிலேஸ்வரக் குருக்கள்

உ

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவிக்கு

அமைக்கப்பெற்ற

## புதிய மஞ்ச வெள்ளோட்ட விழாவுக்கு

தேவஸ்தான மஹோற்சவ சிவாச்சாரியார்

## சிவஸ்ரீ சு. செந்தில்ராசக் குருக்கள்

வழங்கும்

# ஆசியுரை

மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம், வரலாறு என்னும் கீர்த்திகளை தன்னகத்தே கொண்டது தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானம். துர்க்காதேவிக்கு புதிய திருமஞ்சம் அமைத்து வெள்ளோட்டம் காணும் இன்றைய நன்நாளில் திருமஞ்சத்தை உருவாக்கிய ஸ்தபதிகளுக்கு எனது ஆசிகளும், துர்க்காதேவியின் திருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

என்ன யுகதருமமிது கலியினில்லா
திண்பமிகு நான்காய ஜாதிகொள்வார்
பன்னறிய சிற்பநூல் விவேக முள்ளார்
பக்தியுயர் சிந்தனை யறத்தின் மிக்கார்
நன்னடைய ராசார முள்ளார் நூலோர்
நயமான வாக்குளார் தாஞ் சிற்பர் கண்டாய்

– காக்கையர்சிற்பம்

என்ற பாடலுக்கு அமைய ஒழுகும் விஸ்வப்பிரம்மஸ்ரீ செ. பாலச்சந்திரன் ஸ்தபதி அவர்கள், அவர்தம் குழுவினர்கள் பல்லாண்டு காலம் பார்போற்ற வாழத் துர்க்காதேவியைப் பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ சு. செந்தில்ராசக் குருக்கள்

உ

அம்பாள் துணை

தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்

தலைவர்

செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன்

அவர்களின்

# சிறப்புச் செய்தி

தேசம் போற்றும் தெல்லிநகர்த் துர்க்கை அம்மனின் திருவீதியில் திருமஞ்சம் பவனிவரும் காட்சியைக் காணத் திருவருள் பாலித்த துர்க்காதேவியை பிரார்த்திக்கின்றேன். துர்க்கை அம்பாளின் மீளா அடியவராக என்னை ஆற்றுப்படுத்தி, அவையத்தில் முன்நின்று பணி செய்ய வைத்த அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் திருவடிகளை நீள நினைந்து வணங்குகிறேன். துர்க்காதேவிக்கு திருமஞ்சம் உருவாக்குவதற்கு நல்லாசிகளையும், அறிவுரைகளையும் வழங்கிய மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கும், கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் சமர்ப்பிக்கிறேன். அம்பாளின் திருமஞ்சத்தில் மிகவும் ஆவல் கொண்ட எங்கள் தேவஸ்தானத்தின் பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்களின் நல்லார்வத்துக்கும், நல்லாசிக்கும் நன்றியுடையோம். எங்கள் தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் இப்பணியில் மிகவும் அக்கறை கொண்டு உழைத்தமை சிறப்புக்குரியது. திருமஞ்சத்திருவிழா உபயகாரர் திரு. ச. ஆறுமுகநாதன் முதல் பல அடியவர்கள் நிறைவாகத்தந்த காணிக்கையில் அம்பாளின் திருமஞ்சம் மிகவும் அழகாக உருவாக்கம் பெற்றுள்ளது. சிற்பக் கலைஞர் மதிப்புக்கும், அன்புக்குமுரிய திரு. செ. பாலச்சந்திரன்எமது வேண்டுகோளை பெருமனத்துடன் ஏற்று தன் கைவண்ணத்தில் இப்பெருமஞ்சத்தை உருவாக்கியுள்ளார். பாலச்சந்திரன் அவர்கள் எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்விமீது கொண்ட விசுவாசமும், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள்மீது கொண்ட பக்தியும், அவரது சிறப்புக்களுக்கு

காரணம் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். அவ்வகையில் இத்திருமஞ்சம் உருவாக்குவதில் மிகவும் அக்கறை கொண்டு உழைத்தமைக்கு யாம் என்றும் நன்றியுடையோம். அவரது சிற்பக் குழுவில் அங்கம் வகித்த அனைவரும் ஆற்றல் நிறைந்தவர்கள் என்பதைத் திருமஞ்சம் எடுத்துரைக்கிறது.

திருமஞ்சத் திருப்பணி 10-09-2008 அன்று ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டு இன்று வெள்ளோட்டம் காண வைத்தமை துர்க்காதேவியின் திருவருளே. திருமஞ்சப் பணி ஆரம்பிப்பதற்கு ஆலய வடக்கு வீதி விஸ்தரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வேளையில் வடக்கு எல்லையின் காணிச் சொந்தக்காரர் திரு. வே. செல்வரட்ணம் அவர்களை நாடினோம். அவர் காணி தர சம்மதித்தமை நன்றிக்குரிய விடயமாகும். திருமஞ்சம் தொடர்பாக யான் தொலைபேசியில் விடுத்த வேண்டுகோளை ஏற்று இங்கிலாந்தில் வாழும் திரு. கி. பாலசிங்கம் அவர்கள் (தலைவர், இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கம்) மிகவும் பெறுமதியான 'பெயின்ற்' வகைகளை தனது செலவில் அனுப்பிவைத்தார்கள். அப்பெருந்தகைக்கு அம்பாளின் அருள் நிறைவதாக. திருமஞ்சத்தில் பவனி வருவதற்கும் முக்கிய விழாக்களில் துர்க்காதேவியுடன் பவனிவர பலமுருகன் எழுந்தருளி விக்கிரகம் அமைத்தல் நன்று எனப் பெரியோர்கள் ஆலோசனை வழங்கினர். இராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் நல் ஆலோசனை வழங்கினார். இந்தியாவிலுள்ள சுவாமிமலையிலிருந்து அழகான பாலமுருகன் எழுந்தருளியை குறுகிய காலத்தில் தனது அன்பளிப்பாக விமானத்தில் உடன் அனுப்பி வைத்தவர் உயர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் (கௌரவ செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்). இப்பெரியார் மஞ்சத்துக்கான பவளக்காலை நாட்டி வைத்ததுடன் பல்வேறு உதவிகளைச் செய்து எமக்குப் பெரும் பக்கபலமாக விளங்குவது அம்பாளின் திருவருளே. திருமஞ்சத்திற்கான ஐந்து முடிகளையும் பொறுப்பேற்று உதவிய திரு. வி. கைலாசபிள்ளை தம்பதிகளின் (தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்) உதவிக்கும் யாம் நன்றியுடையோம். திருமஞ்சத்தில் பொருத்துவதற்காக மணிகளை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பொறுப்பேற்று நன்முறையில் செய்வித்து வழங்கியமை இங்கு குறிப்பிடவேண்டும். அவர்களுக்கும் எமது நன்றிகள். யான் கொழும்புசென்றவேளை காலஞ்சென்ற இந்து கலாச்சார அமைச்சர்

அமரர். மகேஸ்வரன் அவர்களின் பாரியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. மஞ்சத் தரிப்பிடம் அமைப்பதற்கான சீமெந்து முழுவதையும் தந்துதவுவதாகக் கூறி மறுநாளே அனுப்பிவைத்தார்கள். நாயகன் வழியில் நற்பணி தொடரும் நங்கையின் பண்பு பாராட்டிற்குரியது. அவர்களுக்கு அம்பாள் ஆறுதல் வழங்க வேண்டுகின்றேன். கொழும்பிலிருந்து பொருட்கள் கொண்டுவர உதவிய தொழில் அதிபர் திரு. சின்னத்துரை அருளானந்தம், மனோச் விமானசேவை நடாத்தும் அன்பர் திரு. மனோகரன் (காரைநகர்) அவர்களின் தாராள மனத்துக்கு யாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். திருமஞ்சத் திருப்பணிக்கு எமது நிர்வாகசபைக்கு பெரிதும் உறுதுணையாக விளங்கும் தேவஸ்தானப் பணியாளர்கள், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் பெண்கள் தொண்டர் சபையினர், துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியையும், வாழ்த்தையும் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அம்பாளின் அடியவர்கள் தரும் ஊக்கமும் உதவியும் எம்மை வழிப்படுத்துகிறது. அம்பாளின் திருமஞ்சத் திருப்பணி உண்மையிலேயே திருவருளால் நிறைவேறுகிறது இதுவே மெய் என்பதை பரிபூரணமாக உணர்கிறேன்.

*நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து*
*நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள*
*பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறு பெற்றேன்*
*தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே.*

– அபிராமி அந்தாதி.

அம்பாளின் திருமஞ்சப் பவனியோடு எம்மண்ணில் விடிவு ஏற்பட்டு அனைவரும் இன்புற்று வாழ வேண்டுதல் செய்து அமைகிறேன்.

"யாவர்க்கும் இன்னுரைதானே"

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

ஆறு. திருமுருகன்
தலைவர்

உ

அகில இலங்கை இந்துமாமன்ற

பொதுச் செயலாளர்

## திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

## திருமஞ்சம் வீற்றிருந்து திருவீதியுலாவரும் அருள்மிகு துர்க்காதேவி

சைவத்திருப்பணியுடன் சமூகநலப் பணியையும் இணைத்து அருட்பணியாற்றிவரும் பெருமைக்குரியது தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். இங்கு இவ்வருட மஹோற்சவத்தின்போது முதன்முதலாக திருமஞ்சத் திருவிழாவும் நடைபெறவிருப்பது தெய்வீகச் சிறப்பான நிகழ்வாகும்.

தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கும் ஆன்மீகச் சிறப்புக்கும் காரணமாகத் திகழ்ந்த சைவத் தமிழுலகம் போற்றித் துதிக்கும் தெய்வத் திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது மறைவுக்குப் பின்னர், தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களது தெய்வத் திருப்பணியின் மகுடமாக தேவஸ்தானத்திற்கென புதியதொரு திருமஞ்சம் அமைக்கப்பெற்று அம்பாள் திருவீதியுலாவரும் அருள்மிகு காட்சியை இவ்வருட மஹோற்சவத்தின்போது அடியார்கள் பார்த்துப் பரவசமடையவிருப்பது சிறப்புக்குரியதாகும்.

புத்தூர் காளிகா சிற்பாலயத்தின் பிரதம சிற்பாசாரியார் செல்லையா பாலச்சந்திரன் தலைமையிலான சிற்பக் கலைஞர்களின் எழில்மிகு கைவண்ணத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள புதிய திருமஞ்ச வெள்ளோட்டமும், திருமஞ்சத் திருவிழாவும் சிறப்பாக அமையவேண்டும் என்பதுடன் நாட்டில் அமைதியும், சுபீட்சமும், மக்களுக்கு எல்லா வகையான நன்மைகளும் சிறப்புக்களும் கிடைக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளை வேண்டிப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

**கந்தையா நீலகண்டன்**

உ

## வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை
## பிரதேசசெயலர்
# திரு.சு. முரளிதரன் அவர்கள்
வழங்கிய
# வாழ்த்துச்செய்தி

**தெல்லி நகரில் அருளாட்சி செய்யும் துர்க்கை அம்பாளே!**
**புதிய மஞ்சத்தில் எழுந்தருளி நீ வருக!**

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லியூர் துர்க்கை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ கால திருவிழாக்களில் திருமஞ்சத் திருவிழா பல வருடங்களாக இடம்பெற்று வராமை அம்பாளின் பக்தர்கள் மனதில் நீண்டதொரு குறையாகவே இருந்துள்ளது. அம் மனக் குறையானது, இவ்வருட மஹோற்சவத்துடன் நிறைவேற்றப்படுகின்றது என்ற செய்தி எமது செவிகளில் தேன் பாயும் செய்தியாக அமைந்துள்ளதும் கண்கூடு. புதிய மஞ்சமும், மஞ்சப் பவனியும் புதிய வரவாக இருந்தாலும், அம்பாளின் வழிநடத்தலால் கிடைக்கப்பெற்ற ஒரு அரிய பேறாகவே நாம் பார்க்கவேண்டியுள்ளது. அந்தவகையில் மஞ்ச ரதத்தை வடிவமைத்த சிற்பிகளுக்கும், தேவஸ்தானத் தலைவர் மற்றும் நிர்வாகிகளுக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திப்பதுடன், மஞ்சரத வெள்ளோட்ட மலருக்கான வாழ்த்துச் செய்தியினை முழு மனதோடு வழங்கி நிற்கின்றேன்.

**"வாழ்க இறை பணி"**

**சு. முரளிதரன்**

உ

காளிதேவியே துணை

சிற்பக்கலாவித்தகர்

# திரு. செல்லையா பாலச்சந்திரன்

அவர்களின்

# செய்தி

தெல்லிமா நகரில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அகிலாண்ட நாயகி துர்க்கைக்கு அனந்தகோடி நமஸ்காரம். அம்பாளின் திருவருளும், குருவருளும், அம்மாவின் ஆசியும் துணை நிற்க திருமஞ்சம் நிர்மாணித்து வெள்ளோட்டம் விடுகின்ற பொன்நாளில் எமது சிவத்தமிழ்ச்செல்வி அன்னை, குரு கலைஞானி செ. கந்தசாமி, கலாகேசரி ஆ. தம்பித்துரை, மாதா பிதா அவர்களை மன சுத்தியோடு வணங்குகின்றேன். எமது காளிகா சிற்பாலய எழுச்சிக்குத் துர்க்காதேவி ஆலயம் உட்பட பல ஆலயங்களில் ஆசியுரை சிறப்புக் கௌரவம் வழங்கிய நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசன்னிதானம், எம் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, எம் அன்பிற்குரிய செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் மூவரும் நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும். அம்பாளின் ஆலயத்தில் அம்மா அவர்களுக்கு இளைஞனான என்னை கலாகேசரி அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். அம்பாளின் அருளும், அன்னையின் அரவணைப்பும் எம்மைப் பல ஊர்த்திகளின் படைப்பாளியாக்கியது. அம்பாள் ஆலயத்திலும் பல திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளோம். நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் எமது கன்னி வெள்ளோட்ட நிகழ்வில் குருக்கள்மார்கள், துர்க்கா தேவஸ்தான பொருளாளர், செயலாளர் உட்பட அம்மா அவர்கள் பொன்னாடை போர்த்தி சிறப்பான ஆசியுரை வழங்கினார். அந்த உரையில் கலைஞர்களுக்கு ஒருபோதும் தலைக்கனம் வரக்கூடாது, உயர்வு வரவர பணிவு வரவேண்டும். எங்கள் பிள்ளையான பாலச்சந்திரனுக்கு அது வரவே மாட்டாது என்று மிகவும் உரிமையோடு கூறினார். அந்த உரையை தாரக மந்திரமாகக் கொண்டேன். சீரணி நாகம்மாள் ஆலயத்தின் விநாயகர் தேர் வெள்ளோட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் அம்மா அவர்களினால் இளங்கலைமானி உயர் விருதும், தங்கப் பதக்கமும் தந்து கௌரவிக்கப்பட்டது. அன்றுமுதல் வெள்ளோட்டமும் அம்மாவின் ஆசியும் தொடர்ந்து கொண்டே போனது. ஆலயத்திற்கு வருகின்ற அறிஞர்கள், பெரியோர்கள், கல்விமான்கள், ஆலய அறங்காவலர்கள் ஆகிய யாவரையும் எமக்கு அறிமுகம் செய்து தேவஸ்தான சிற்பாசாரியென பெருமைப்

படுத்தினார். உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய ஆசியுரையில் கலைஞர்கள் வணக்கத்திற்குரியவர்கள் என உயர்வாக்கினார். சிறுப்பிட்டி அம்பாள் ஆலய தேர் வெள்ளோட்ட ஆசியுரையில் இன்றைய உதயதாரகையாக விளங்குபவர் எங்கள் ஆலயக் கலைஞர் அவர்கள். அதனாலே பல ஆலய அந்தண சிவாச்சாரியார்கள், அறங்காவலர்கள், நிர்வாகிகள் தங்களது ஆலயத்திற்கு அழைக்கின்றனர். துர்க்கை ஆலயத்தில் நாமும் ஒருவர் ஆனோம். பல திருப்பணிகள் எம்மை நாடிவந்தன. அம்மா அவர்கள் அம்பாளுக்கு திருமஞ்சம் உருவாக்கும் பணியை ஆரம்பித்தார். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தடைப்பட்டது.கால ஓட்டத்தில் அம்மாவும் அம்பாளின் பாதார விந்தங்களை அடைந்தார். அது எமக்கு மிகவும் மாறாத துயரை ஏற்படுத்தியது. செயல்திறன் மிக்க இன்றைய தலைவர் திரு. ஆறு. திருமுருகன் மஞ்சத் திருவிழா உபயகாரர் பரோபகாரி திரு. ஆறுமுகநாதன் கடமை கண்ணியம் மிக்க பொருளாளர் திரு. சண்முகநாதன் அவர்களின் முயற்சியில் நிர்வாகசபையினரின் பூரண ஒத்துழைப்புடனும், மாவை ஆதீன கர்த்தா மகாராஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின் ஆசியுடனும் சென்ற மஹோற்சவத்தில் திருமஞ்சத் திருப்பணி ஆரம்பமானது. இயற்கையின் சீற்றமான நிஷாவினால் வீழ்ந்த பெரும் மரங்களை அம்பாள் தனதாக்கிக் கொண்டாள். வடக்கு வீதி முழுவதும் சிற்பசாலையானது. பல கலைஞர்கள் இரவு பகல் பாராது திருமஞ்சத்தை நிர்மாணிக்கின்றனர். பார்விதானம் முதல் முகபத்திர அமைப்பை கொண்டதாக சிம்மங்கள், பூதங்கள், துவார சக்திகள், அஷ்டகஜம், அஷ்டசர்ப்பம், அஷ்டசிம்மங்கள், குதிரைகள், ஜாளிகள், கெந்துருவர்கள் என்பன அமைக்கப் பெற்றிருக்கின்றன. புனிதமானதெய்வீக திருப்பணியை நிர்மாணிக்க உதவிய சிற்பக் கலைஞர்கள், சிவாச்சாரியர், தர்மகர்த்தாசபையினர், உதவி ஸ்தபதி திரு. ம. விஜயரட்ணம், வர்ணம் தீட்டியோர், மேல்விமானம் அமைத்த ஸ்தபதி கோகுலன் அவர்கள், இந்திய சிற்பக் கலைஞர்கள், நேரம் தவறாது தேனீர், உணவு அளித்தமகளிர் இல்ல சகோதரிகள், தேவஸ்தான அலுவலர்கள், திரு. கா. சிவபாலன் அவர்கள், கடமை உணர்வுள்ள இந்து இளைஞர் சங்கத்தினர், களஞ்சியப் பொறுப்பாளர் விக்கினேஸ்வரன் அவர்கள் அனைவருக்கும் அம்பாள் திருவருள் கிடைக்கவும், அம்பாள் திருமஞ்சத்தில் திருவீதியுலா வரவும் அம்பாளை வணங்கி நிற்கின்றேன்.

செ. பாலச்சந்திரன்



துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்
செல்வர் திரு.ஆறுதிருமுருகன் அவர்கள் வெள்ளோட்ட விழாவில்
தலைமை தாங்கும் காட்சி...



திருமஞ்ச வெள்ளோட்ட விழாவில் ஸ்தபதி செல்லையா பாலச்சந்திரன்
அவர்களுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஆசி வழங்கும் காட்சி.
அருகில் மாவைக்கந்தன் ஆலய முதல்வர்
மகாராஜி து.சண்முகநாதக் குருக்கள்...



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா
இராஜ இராஜஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆசியுரை வழங்கும் காட்சி...



மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்
ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ து.சண்முகநாதக் குருக்கள்
ஆசியுரை வழங்கும் காட்சி...

## சிற்பக் கலைஞர்களை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் அவர்கள் கௌரவிக்கும் காட்சி...




சிற்பக் கலைஞர் திரு.ம. விஜயரத்தினம்



சிற்பக் கலைஞர் திரு.வே. பாலேந்திரன்



சிற்பக் கலைஞர் ந.மனோகரன்




ஸ்தபதி, ரத கலாஞானி
**விஸ்வப்பிரம்மஸ்ரீ செல்லையா பாலச்சந்திரன்**



சிற்பக் கலைஞர்
பாலச்சந்திரன் தம்பதிகளை
கௌரவிக்கும் காட்சி...



"சிற்பவித்தகர்" எனும்
பட்டம் வழங்கி
யாழ்.பல்கலைக்கழக
துணைவேந்தர் பேராசிரியர்
நா.சண்முகலிங்கம்
ஸ்தபதியைக் கௌரவிக்கும்
காட்சி...



மஞ்சத் திருவிழா
உபயகாரர்களுடன்
சிற்ப வித்தகர்...

## தேவஸ்தான சிற்பாசாரியாருக்கு சிவத்தமிழ் செல்வியின் கௌரவங்கள்







உ

அம்பாள் துணை

# திருமஞ்சத் திருப்பணி தொடர்பான செயலாளரின் அறிக்கை

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவிக்கு சிற்பசாஸ்திர ஆகம விதிமுறைகளுக்கு உட்பட்டு கலை அம்சமும், அழகும் வெளிப்படுத்தக்கூடிய வகையில் திருமஞ்சம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாக எமது தேவஸ்தான நிர்வாகசபைக்கு இருந்தபோது திருமஞ்சம் தரிப்பதற்கான கட்டடம் கட்டுவதற்கான காணி 06-09-2008 நிர்வாகசபைக்கூட்டத் தீர்மானப்படி தேவஸ்தானத்துக்கு வடக்குப்புறமாக வசிக்கும் "செல்வமனை" துர்க்காபுரத்தைச் சேர்ந்த பெரியார் திரு. செல்வரத்தினம் தம்பதிகளிடம் இருந்து நான்கு பரப்புக் காணி ரூபா ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரத்துக்கு கொள்வனவு செய்யப்பட்டது. (உறுதி இலக்கம் 10542). திருமஞ்சத் திருப்பணி சம்பந்தமாக ஒரு உப குழு 06-09-2008இல் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது. இக் குழுவில்,

| | |
|---|---|
| தலைவர் : | திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் |
| உப-தலைவர்: | திரு. சி. அருளானந்தசிவம் அவர்கள் |
| | திரு. ச. ஆறுமுகநாதன் அவர்கள் |
| இணைச் செயலாளர்கள் : | திரு. நா. தவநாதன் அவர்கள் |
| | திரு. மு. அருளையா அவர்கள் |
| பொருளாளர் : | திரு. அ. சண்முகநாதன் அவர்கள் |
| நிர்வாகசபை உறுப்பினர் : | திரு. ச. உமாசுதன் அவர்கள் |

ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

திருமஞ்சத் திருப்பணி வேலைகள் புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த காளிகா சிற்பாலய ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ செ. பாலச்சந்திரன் மூலம் செய்யப்படல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டு இவ்வேலைகள் யாவும் 10-09-2008 சனிக்கிழமை சப்பறத் திருவிழா அன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. திருமஞ்சம் தரிப்பதற்கான கட்டடம் கட்டுவதற்கான ஜனா கட்டட ஒப்பந்தக்காரர் திரு. ஆ. ஜனார்த்தனனுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

திருமஞ்சம், திருமஞ்சக் கட்டடம் யாவும் எல்லாம் வல்ல எம்பிராட்டியின் திருவருளினால் ஒருவருட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதையிட்டு இத்திருப்பணிக்கு எல்லாவகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எம்பெருமாட்டியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**நன்றிக்குரியவர்கள் :**

01. திருமஞ்சத் திருப்பணியில் அச்சு வைக்கும் வைபவத்தில் அருளாசியினை வழங்கிய மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், நகுலேஸ்வர ஆதீன முதல்வர் இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் ஆகியோருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

02. திருமஞ்சத் தரிப்பிடம் அமைப்பதற்கான காணியைத் தந்துதவிய "செல்வமனை" துர்காபுரத்தைச் சேர்ந்த திரு. வே. செல்வரத்தினம் தம்பதிகளுக்கு நன்றி உரித்தாகுக.

03. கலை அம்சமும் அழகும் நிறைந்த திருமஞ்சத்தை உரிய காலத்தில் செய்துதந்த காளிகா சிற்பாலய ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ செல்லையா பாலசந்திரன் குழுவினருக்கு நன்றி உரித்தாகுக.

04. திருமஞ்சத்திற்குரிய மரங்களை அன்பளிப்புச் செய்த,

i. தெல்லிப்பழை காசி விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த திரு. க. கனகரத்தினம் குடும்பம்,

ii. தெல்லிப்பழை துர்க்காபுரத்தைச் சேர்ந்த செல்வி கௌரிதேவி,

iii. புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த திரு. நா. யோகநாதன்,

iv. கந்தரோடை சுன்னாகத்தைச் சேர்ந்த சிவகுமார்,

v. துர்க்காபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நில அளவையாளர் திரு. வ. இரத்தினம் தம்பதிகள்,

vi. பாலன் வளவு தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. மு. முருகதாஸ்,

vii. இணுவில் துரை வீதியைச் சேர்ந்த திருமதி புஸ்பராசா யோகேஸ்வரி,

viii. உடுவில் தெற்கைச் சேர்ந்த திரு. வ. குகதாசன்,

ix. கலைநகர் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த திருமதி மா. தங்கம்மா,

x. உரும்பிராயைச் சேர்ந்த செல்வி ரோகினி பேராயிரவர்

ஆகியோருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக. மேலும் குறைந்த விலையில் பாரிய மரங்களைத் தந்துதவிய ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் நன்றி உரித்தாகுக.

05. திருமஞ்சத் திருப்பணிக்கு உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்ள அம்பாள் அடியவர்கள் தாராளமாக நிதியினை வழங்கியமைக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

06. திருமஞ்சத்திற்குத் தேவையான மரங்களை ஏற்றிப் பறிப்பதற்கான வழி அனுமதி பத்திரங்களை உரிய நேரத்தில் தந்துதவிய கிராமசேவையாளர்கள், பிரதேச செயலாளர்கள் வலி-வடக்கு, வலிகாமம் தெற்கு, கோப்பாய் மற்றும் அரச மரக்கூட்டுத்தாபன முகாமையாளருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

07. திருமஞ்சத்திற்குத் தேவையான மரங்களை அரிந்து தந்த ஈஸ்வரி மரக்காலை, மல்லாகம். உரிமையாளருக்கும், துர்க்காபுரம் அரிவு ஆலை உரிமையாளர் திரு. ஆனந்தனுக்கும், சுன்னாகம் தர்சன் அரிவு ஆலை உரிமையாளர் மகாலிங்கத்திற்கும் நன்றிகள் உரித்தாகுக.

08. திருமஞ்சம் தரிப்பதற்கான கட்டடத்தை கட்டித் தந்த கட்டட ஒப்பந்தக்காரர் திரு. ஆ. ஜனார்த்தனன் அவர்களுக்கும், கூரை வேலையைச் செய்து தந்த திரு. செ. முத்துக்குமார் அவர்களுக்கும், திருமஞ்சத்திற்குரிய இரும்புக் கதவுகளைச் செய்து தந்த மல்லாகத்தை சேர்ந்த ஸ்ரீதரன் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

09. இந்தியா, சுவாமிமலையிலிருந்து அழகிய பாலமுருகன் எழுந்தருளி விக்கிரகத்தையும் அத்துடன் திருமஞ்சத்திற்குரிய பெயின்ற் வகைகளையும் இந்தியவிலிருந்து தருவித்தும், பவளக்கால் நாட்டும் வைபத்தில் நேரில் வந்து பவளக் காலை திருமஞ்சத்தில் வைத்தமைக்கும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொதுச்செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

10. பாலமுருகன் விக்கிரகத்தையும் பெயின்ற் வகைகளையும் எமது தேவஸ்தானத்திற்கு உரிய காலத்தில் கிடைக்க போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தந்த கொழும்புப் பிபல வர்த்தகர் திரு. சின்னத்துரை அருளானந்தம் அவர்களுக்கும், மனோஜ் ரவல்ஸ் உரிமையாளருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

11. திருமஞ்ச மேல் விமானத்தை செய்து தந்த அராலியைச் சேர்ந்த கோகுலன் குழுவினருக்கும், அவ்விமானத்தை திருமஞ்சத்தில் பாரந்தூக்கிகள் மூலம் வைப்பதற்கு உதவிய இலங்கை மின்சாரசபை, திரு. ஜெயக்குமார், திரு. ரவி ஆகியோருக்கும் நன்றி உரித்தாகுக.

12. திருமஞ்சத் தரிப்பிடத்திற்கான கட்டடத்திற்குரிய சீமெந்து முழுவதையும் அன்பளிப்புச்செய்த முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரின் பாரியார் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு நன்றி உரித்தாகுக.

13. திருமஞ்சத்திற்கான இரும்பு வேலைகள் செய்து தந்த திருவாளர்கள் க. மோகனதாஸ், செ. மயில்வாகனம் ஆகியோருக்கும் வர்ணப் பூச்சு வேலைகளைச் செய்துதந்த திருவாளர்கள் செ. செல்வதாஸ், இ. ஜெயசீலன் ஆகியோருக்கும்

14. மர அச்சுக்கான கவசங்கள் திருத்தொங்கல் பித்தளை அலங்காரம் செய்த திரு. வே. பாலேந்திரன் அவர்களுக்கும், அழகான மணிகளையும் இரும்பு அச்சின் கவசங்களையும் வடிவமைத்துத் தந்தவர்களுக்கும், சுவாமி ஏற்றுவதற்குரிய ஏணியைச் செய்து தந்தவர்களுக்கும், மின் இணைப்புச் செய்துதந்த திரு. த. தயானந்தன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

15. வர்ணப் பூச்சிற்குரிய பெயின்ற் வகைகளை இலண்டனில் இருந்து அன்பளிப்புச் செய்து அனுப்பிவைத்த இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு. சி. பாலசிங்கத்திற்கு நன்றி உரித்தாகுக.

16. திருமஞ்சத்திற்குரிய ஐந்து கலசங்களையும் அன்பளிப்புச் செய்த அகில இலங்கை இந்துமாமன்றம் (கொழும்பு) தலைவர் வை. கயிலாசபிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

17. திருமஞ்சத்திற்குரிய மணிகளை அன்பளிப்புச் செய்த தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்திற்கு நன்றி உரித்தாகுக.

18. திருமஞ்சத்திருப்பணிவேலைகள்பூர்த்தியாவதற்கு உதவிபுரிந்த நிர்வாக சபையினர், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர், பெண்கள் தொண்டர் சபையினர், மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கும் பலவகைகளிலும் உதவி புரிந்த அன்பர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

நா. தவநாதன்
மு. அருளையா
இணைச் செயலாளர்கள்

# ஆலய இட அமைப்பும் அதன் பெயரும்

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் தேவாரம்

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் லெழுபதினெட்டு மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பணைய கொகுடிகோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிப்பட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங்கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ் சத்தீவினைகள் தீரும் அன்றே.

இதன் பொருள் :-

1. குன்றுமேல் எடுப்பிக்கப்பட்ட கோயிலும் யானை படுக்கும் முதுகு மட்டத்துக்குமேல் உயரமாக கட்டப்பட்ட பெரிய கோயில்களுக்கும் பெருங்கோயில், மாடக்கோயில், மலைமல்கு கோயில், திருமலைக்கோயில், தூங்கானை மாடக் கோயில் என பல பெயர்கள் பெறும்.

2. குன்றின்மேல் கோயில் கட்டப்பட்டிருந்து கீழ்ப்புறம் ஊரில் அமைந்த கோயிலுக்கு தாழக்கோயில் எனப் பெயர் பெறும்.

3. தேர் வடிவாக சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோயிலுக்கு கரக்கோயில் என்று பெயர் பெறும்.

4. மரத்தடியில் அமைக்கப்பட்ட கோயிலுக்கு ஞாழர் கேயில் என்று பெயர் பெறும்.

5. முல்லை கொடியுள்ள இடங்களில் அமைக்கப்பட்ட கோயிக்கு கொகுடிக் கோயில் என்று பெயர் பெறும்.

6. ஆலமரத்தடியில் அமைக்கப்பட்ட கோயிலுக்கு ஆலக் கோயில் என்று பெயர் பெறும்.

7. ஆழ்வார்களால் பாடப்பெற்ற கோயிலுக்கு மணிக்கோயில் மாமணிக்கோயில் என்று பெயர் பெறும்.

8. கிராமத்தின் மத்தியில் சிவன் கோயிலும், கிராமத்தை சுற்றிலும் சிறு சிறு கோயில்களும் அமைந்து இருந்தால் சிவன் கோயிலுக்கு ஸ்ரீ கோயில் என்றும் மற்ற சிறு கோயில்களுக்கு திருமுற்றம் என்றும் பெயர் பெறும்.

# கோபுர கட்டட அமைப்பும் அதன் பெயரும்

ஏக தள விமானம் அல்லது விமானத்தின்மேல் நிலை, கழுத்தடியிலிருந்து பண்டிகை மகாபத்மம் வரையில்.

1. வட்டமாய் இருக்கும் கோபுரங்களுக்கு விருத்த விமானம்.
2. சதுரமாய் இருக்கும் கோபுரங்களுக்கு சதுரஷ விமானம்.
3. ஆறு பட்டையாய் இருக்கும் கோபுரங்களுக்கு சட்கோண விமானம்.
4. எட்டு பட்டையாய் இருக்கும் கோபுரங்களுக்கு அஷ்ட கோண விமானம்.
5. எதிர்புறம் மரமாடி போலும், இரண்டு மூலையாய் பின்னால் யானை முதுகுபோலும் இருக்கும் கோபுரங்களுக்கு கெஜப்பிரஷ்ட விமானம், தூங்கானை மாட விமானம், அத்தி புஷ்ட விமானம் என்று பெயர்.
6. இரண்டு பக்கம் மர மாடியும் ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் இருக்கும் கோபுரங்களுக்கு சத்தி நிளம், மகா துவார கோபுரம், இராஜ கோபுரம் என்று பெயர்.

# பட்டிமண்டபம் - மன்றம்

பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள்

மன்றம், மன்று, பொது, அரங்கு, மேடை பெரும்பாலும் ஒத்த பொருள் உடையன. நாடக அரங்கு, நாடக மேடை, விவாத அரங்கு, விவாத மேடை, விவாத சபை நாமறிந்த வழக்காறு. ஸ்ரீரங்கநாதன் பள்ளி கொள்ளும் இடம் ஸ்ரீரங்கம்; நடராஜன் நடனமிடும் மேடை மன்று, மன்றமென அழைக்கப்படும். ஐந்து சபைகளிலே மன்றாடி யார் நடனமிடுகின்றார். ஐந்து சபைகளும் சிதம்பரத்திலே காட்சி தருகின்றன. பொற்சபை (சிதம்பரம்) தாமிரசபை, (செப்பறை, திருநெல்வேலி), வெள்ளியம் பலம் (மதுரை), சித்திரசபை (குற்றாலம்), இரத்தினசபை (திரு ஆலங்காடு) இவை பஞ்ச சபை எனப்படும். தெற்குநோக்கி இறைவன் ஆடுவதுபோன்று அரங்கத் தண்ணலும் தெற்கே நோக்கி அறிதுயில் கொள்கிறான். தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தி தெற்கே பார்க்கிறார். திசையறி கருவியைச் சீனர் கண்டதாக வரலாறு. சைவசிவாலயங்களிற் திசையறிகருவி தெட்சிணா மூர்த்திதான். மண்டபம் திருவோலக்க மண்டபம். பட்டி என்றால் நயம் என்றும் பொருள். சிறுபட்டியெனக் கலித்தொகையிலும் வருகிறது. அஃது குறும்புக்காரன் - குழப்புக் கூறு என்றும் பொருள். கண்ணன் தீராத விளையாட்டுப்பிள்ளை பாரதிக்கு. ஆழ்வார்கட்குக் குழப்புக்கூறு. இப்போ பட்டி மண்டபம் மாறிப் பட்டி மன்றமென அழைக்கப்படுகிறது. கவியரங்கம், சொற்போர், அரங்காடல் எல்லாம் ஒன்றே. அரட்டை அரங்கமாயும் மாறிவிட்டது. அரட்டை வீணாக நேரத்தை செலவு செய்கிறது. காலைத் தூக்கி ஆடும் சிவனது திருவடிகளைத் தேடிப்போனவர் திருமால், காணமுடியவில்லை. இப்போ கோவிந்தராஜனாக பெருமாள் திருச்சித்திர கூடத்தில் காட்சி யளிக்கிறார். கூத்தப்பிரானின் தூக்கிய திருவடியை நடனமாடுகையிற் கண்டு விட்டார். மற்றத்திருப்பாதத்தையும் தரிசிக்க வேண்டி பெருமாள் சிதம்பரத்திற் தவம் கிடைப்பதாக மணிமொழியார் (மாணிக்கவாசகர்) கவி செய்துள்ளார்.

புரங்கடந்தான் அடிகாண்பான்
புவிவிண்டு புக்கறியாது
இரங்கிடு எந்தாய் என்றிரப்பத்
தன்னீரடிக் கென்னிரண்டு
கரங்கள் தந்தான் ஒன்றுகாட்ட
மற்றாங்கதும் காட்டிடென்று
வரங்கிடந்தான் தில்லை மன்றில்
அம் மாயவனே

திருக்கோவையார்.

புரம் - முப்புரம், முப்புரம் எரிசெய்தவன் சிவன். அடி - திருவடிகள், புவி - பூமி, விண்டு- துளைத்து, புக்கு-புகுந்து. அறியாது-காணாமல், எந்தாய்-சிவனே, இரங்கிடு-கருணை செய், தில்லைமன்று- தில்லையம்பலம் (பொன்னம்பலம்).

இந்த ஆடும் பெருமானின் திருச்சொருபங்களை வீட்டில் வைத்திருப்பது சிவ நிந்தனையாகும். இதற்கான தண்டனை கிடைக்கும்.

மேலே காட்டிய பட்டி மண்டபம் பக்திப் பனுவல்களிலும், இலக்கியங்களிலும் வருகிறது. மணிமேகலை, சிலம்பு, சுந்தரகாண்டம் முதலிய இலக்கியங்கள் இப்பதத்தை எடுத்தாண்டுள்ளன. ஒன்று வருமாறு,

மாட கூடங்கள் மாளிகை ஒளிகை மகளிர்
ஆடு அரங்குகள் அம்பலம் தேவர் ஆலயங்கள்
பாடல் வேதிகை பட்டி மண்டபம் முதல் பலவும்
நாடி ஏகினன் – இராகவன் புகழ் எனும் நலத்தான்.

சுந்தரகாண்டம், ஊர்தேடும் படலம் – 133

ஒளிகை- வரிசை, வேதிகை- மேடைகள், பட்டி மண்டபம், விவாத அரங்கு, வழக்காடு மன்றம். இன்று எதிர் நின்று வாதாடும் கவியரங்கமாகவும் பட்டிமன்றங்களாகவும், அரட்டை அரங்கமாகவும் காவு கொள்ளப்படுகிறது. திருப்பெருந்துறையின், பெருந்துறைப் பிள்ளையான மாணிக்கவாசகர் தன் திருவாசகப் பெருநூலில் பட்டி மண்டபம் என்னும் தொடரை ஓர் உயரிய பொருளிற் தருகின்றார்.

கட்ட றுத்தெனை ஆண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடி ரண்டும் அறியேனையே

திருச்சதகம் 44
கைம்மாறு கொடுத்தல் 8

பொருள் : ஏற்றினை- இடபவாகனத்தையுடைய நீ, கட்டறுத்து- பாசங்களை ஒழித்து, எனை ஆண்டு- என்னை அடிமை கொண்டு, எட்டினோடு இரண்டும் அறியேனை- எட்டினோடு இரண்டின் பொருளை அறியாத என்னை, நீறு இட்ட- திருநீற்றை அணிந்த, அன்பரோடு- உன் அடியாரோடு, யாவரும்- எல்லாரும், கண்ணாரக்காண- கண்நிறையக் காணும்படி, பட்டிமண்டபம்- இடமகன்ற உன்திரு வோலக்க மண்டபத்தில், ஏற்றினை- ஏறச் செய்தாய்.

நீறிட்ட அன்பர்- சிவனடியார், எட்டு என்னும்- எண் தமிழ் 'அ' என்றும், இரண்டு என்னும் எண் 'உ' என்றும் எழுதப்படும். ஆகையால் அகர (அ), உகரங்களை (உ) எட்டும் இரண்டும் என்றார். அகரம் சிவனைக் குறிக்கும். உகரம் சக்தியைக் குறிக்கும். சிவம் சக்திகளை அறியாத என்னை என்பதைக் குறிப்பிடும். எட்டினோடு இரண்டும் என்பதற்குப் பத்து என்றும், அதாவது ய- உயிர் என்றும் பொருள் கூறுதலும் உண்டு. பட்டி மன்றம் என்பற்கு வாதசபை என்றும் பொருள் கொண்டு அறிவில்லாத என்னை அறிஞர் சபையில் ஏறச் செய்தாய் என்று கூறுதலும் ஒன்று.

ஜி. வரதராஜன் உரை
பக் – 177–178

இப்பிரயோகம் பலராற் பாவிக்கப்பட்டுளது.

பட்டிமன்றம் இன்று இலக்கியச் சர்ச்சை நிகழும் இடமாகி பொருளீட்டும். இறுவட்டு(CD), பெருவட்டு (DVD) களிலும் பதிவாகி விற்கப்படுகிறது. பொழுது போக்குக்காக இதைப் பார்ப்பர், கேட்பர்.

இராமகாதையிலே வாலிவதை சரியா - தவறா என வாதாடி இன்றும் தொடர்கிறது. கண்ணகியா - சீதையா கற்பிற் சிறந்தவர்கள். இலட்சுமணனா - பரதனா சிறந்தவர்கள். பெரிய புராணத்தில் மிக்கு நிற்பது பக்திச் சுவையா - வரலாற்றுச் சுவையா என்றெல்லாம் விவாதிக்கப்பட்டு கரகோசம் செய்யப்படும். இந்நிலை வளர்ந்து கல்வியா, வீரமா, செல்வமா சிறந்தது. அருளா-பொருளா, குணமா-பணமா, தாரமா - தாயா, மெஞ்ஞானமா - விஞ்ஞானமா மேலானது என்று வாதாடி நடுவராற் தீர்ப்பும் வழங்கப்படும். கல்வி, வீரம், செல்வம் மூன்றுமே தேவை புலனைந்தையும் வெல்வதே வீரமென ஔவை, வள்ளுவர் சேக்கிழார் சுட்டிக்காட்டியுள்ளனர். சிரிப்பு சிரிப்பதற்கா, சிந்திப்பதற்கா நல்ல சிந்தனைகள் அருளும் பொருளுந் தேவை. குணமும் பணமும் மனிதத்தின் தேவைகள். வெளிநாடுகளில் இவற்றையும் கடந்து சமய விவாதமாயும், மொழி சம்வாதமாயும் மாறிவிட்டன.

உதாரணம் தைப்பொங்கல், பட்டிப் பொங்கல் கொண்டாடப்பட வேண்டுமா? தமிழ்மொழி நிலைக்குமா? இந்துமதம் அழியுமா? அழியாதா?, திருமுறை புலம் பெயர் தேயங்களில் தேவையா? தேவையில்லையா? இப்படித் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. இவை விவாத மேடையிற் தீர்மானமாகும். பொதுமக்கள் அதை அமுலாக்கவேண்டுமா? ஆழமாய்ப் பார்ப்போம்.

பொங்கல், மாட்டுப் பொங்கல் தொன்மையான வழிபாடு. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் உழவர் தமிழர் பெருநாள். மாடு கமக்காரனின் பிரதான உயிர். கனடாவில் மாட்டுப் பொங்கல் செய்யச் சந்தர்ப்பம் இல்லை. தமிழ் நாட்டில் ஈழ மண்டலத்தில் இக்கொண்டாட்டங்கள் இன்றியமையாதன. அமெரிக்காவில் விவாத மேடை தீர்மானம் மாறய் அமையலாம். எனவே தமிழர் தம் பெருநாட்களை பல்லாயிரம் வருடங்களாகக் கொண்டாடுகின்றனர். இதை மறுதலிக்காமல் தமிழைப் பேசி, எழுதி, படித்து வளர்க்க வேண்டியது தமிழர் கடமை. தமிழ் வாய்மொழியாகவேனும் பாவிக்கப்படுவதில்லை. தாய்மொழி வாய்மொழிக்கே லயக்கில்லாமற் போனதே. இதைத் தடுத்து நிறுத்துவோம். பட்டி மன்றத்தை விடுத்து திருமுறைகளை முற்றோதுதல் செய்பவர்களே திருமுறையை ஐரோப்பாவில், அவுஸ்ரேலியாவில் நிற்குமா என விவாதிப்பதா. மேடைக்காக ஜன இரஞ்சகத்துக்காகவோ இதை மேற்கொளல் புத்திபூர்வமானதன்று.

மற்றச் சமயத்தினர் இப்படியான நிகழ்வுகளை புறக்கணிக்க நாம் மொழியையும், சமயத்தையும் வைத்து பட்டி மன்றம் நிகழ்த்துவதைத் தவிர்த்து போதனையை விடுத்துச் சாதனைப்படுத்துவோம், சிந்திப்போம், நல்லமாதிரிச் செயற்படுவோம் வாருங்கள்.

சைவ சமய மேசமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள் வெளி
காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்து உழலும் சமயநெறி
புகுத வேண்டாம்ஞ முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாரும் ஜகத்தீரே.

தாயுமானசுவாமிகள் – காடும் கரையும் 3

# இலங்கை வேந்தனும் கயிலை நாதனும்

இராவணன் இலங்கையின் அரசனாக இருந்து வரும் நாளில் ஒரு முறை வடதிசையிலுள்ள குபேரன் ஆளும் அழகாபுரியின் மீது படையெடுத்துச் சென்றான். அங்கு குபேரனை வென்று அவனுடைய நவநிதிகளையும், புஷ்பக விமானத்தையும் கைப்பற்றிக் கொண்டான்.

பின்பு அந்த புஷ்பக விமானத்தில் ஏறித் தன்னாட்டிற்குத் திரும்புகையில் சிவபிரான் எழுந்தருளியுள்ள இமய மலையைக் கடக்க வேண்டியதாயிற்று. அப்போது அங்கு காவல் காத்து நின்ற நந்தியம் பெருமான், அவனிடம் "இராவணா, இது பரமசிவன் கொலுவிருக்கும் இடம் இதன் மீது பறந்து செல்வது நல்லதல்ல, எனவே விலகிச் செல்" என்றார்.

இது கேட்ட இராவணனுக்கு கோபம் பொங்கியது. "ஏ குரங்கு முகமுடையவனே என்னை யாரென்று உணராது பேசுகின்றாய்? நான் ஏன் விலகிச் செல்ல வேண்டும்? என் வழியைத் தடுத்து நிற்கும் இந்த மலையை வேண்டுமானால் வேரோடு பறித்து விலக்கி வைத்துவிட்டு, என் வழியில் பயணத்தைத் தொடர்வேன்". என்று கர்ச்சித்தான்.

இதைக் கேட்ட நந்திதேவர், "ஏ மூடனே, உனக்கு சொல்லிப் புரிய வைக்க முடியாது? நீ எது நினைக்கிறாயோ, அதைச் செய். ஆனாலும் நீ என்னை குரங்கு முகனென்று இகழ்ந்தாய், உன் அரசும் நாடும் குரங்குகளாலேயே அழியட்டும்" என்று கூறி மறைந்தார்.

இராவணன் தனக்குள், "இச்சிவன் எனக்குப் பல வரங்களை அளித்தவன், அவனுக்குரிய இந்த மலையின்மீது செல்வது நல்லதல்ல. ஆயினும் சக்கரவர்த்தியாகிய நான் என் வழியை மாற்றிக் கொள்வதா? வேண்டுமானால் எனது வழியில் குறுக்கிட்ட இந்த மலையை வேரோடு பிடுங்கி அப்பால் வைத்துவிட்டு செல்லுவேன். அதுவே என் தகுதிக்கும் அரசாண்மைக்கும் அழகு" என்று எண்ணினான். உடனே புஷ்பக விமானத்தை விட்டு கீழே இறங்கித் தன் இருபது கரத்தினாலும் கயிலை மலையைப் பறித்தெடுக்க முயற்சி செய்தான்.

அவனுடைய அடாத செய்கையால் கயிலாயம் குலுங்கியது. தேவர்களும், பூதகணங்களும் நிலை தடுமாறி ஒருவர்மேல் ஒருவர் விழுந்தனர். பார்வதி தேவியும் நடுங்கினாள். தன் நடுக்கந் தீர இறைவனைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

இறைவன் இராவணனின் செருக்கை அடக்க எண்ணினார். தனது வலதுகால் கட்டை விரலையூன்றினார். அந்த அழுத்தம் அளவற்ற யானைகளின் பலத்தையொத்திருந்தது, மலையின் கீழ் அகப்பட்டுக் கொண்ட இராவணனால் இந்தப் பளுவைத் தாங்க முடியவில்லை, அவனது இருபது கண்களும் பிதுங்கின. தோள்கள் நெறித்தன. அழுது அலறினான். அப்போது அவன் முன்பு வாகீசர் என்ற முனிவர் தோன்றினார். இராவணனே, "இனி, அழுது பயனென்ன. சிவ பெருமானின் கோபம் தணியச் சாமகீதம் பாடுவாய்" என்று கூறினார்.

இராவணன் தனது தவறை உணர்ந்தான். தனது பத்துத் தலைகளில் ஒன்றைப் பறித்து அதனைக் குடமாகவும் கையொன்றைத் தண்டாகவும் நரம்புகளைத் தந்தியாகவும் அமைத்து அவசரத்திற்கு ஒரு வீணையைத் தயாரித்தான். அதனை மீட்டிச் சாமகானம் பாடினான்.

அந்த இனிய இசை எங்கும் பரவியது. தேவர்களும், மூவர்களும், யாவரும் அதில் தன் வசமிழந்தனர். சிவபெருமானும் அந்த இசையில் நெகிழ்ந்தார். தான் விரல் ஊன்றுவதை விடுத்தார். அந்த நிலையைப் பயன் படுத்தி இராவணன் மெதுவாக மலையை கீழே வைத்துவிட்டு தனது இசையை முடித்தான்.

அவனுடைய இசைக்கு உருகிய பரமசிவன் மகிழ்ந்து அவனுக்கு "சந்திரகாசம்" எனும் வாளையும் "முப்பத்து முக்கோடி வாழ்நாள்" அளவு ஆயுளையும் கொடுத்து மகிழ்ந்தார்.

இராவணன் சிவனருள்பெற்று எல்லையற்ற மகிழ்ச்சியுடன் இலங்கைக் குத் திரும்பினான்.

**சிவபுராணம் காட்டும் இராவணன் கயிலையைப் பெயர்த்த கதை :**

மேலே சொன்ன கதையே தென்னகமெங்கும் வழங்கப்பட்டுவரும் கதையாகும். தமிழ் மறையான தேவாரத்திலும் இராவணன் தேர் செலுத்திச் சென்றதும் அதன் வழியைத் தடுத்த கயிலை மலையைத் தூக்கி அதன் கீழ் அகப்பட்டுக் கொண்ட இறைவனின் நகத்தால் ஊன்றப்பட்டு அழுது அலறி இறைவனைப் பாடி அருள் பெற்ற வரலாறே கூறப்பட்டுள்ளது.

ஆனால், சிவமகாபுராணத்தில் இராவணன் கயிலைமலையைத் தூக்கிய தற்கான காரணம் வேறுவிதமாகக் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு:-

ஒருமுறை இராவணன் ஹிமய கிரிச் சாரலில் அகோரதவம் செய்து சிவபெருமானின் அருளைப் பெற்றான். அந்தச் செய்தி உலகமெங்கும் பரவியது. அசுரர்கள் தங்கள் மன்னன் பெற்ற வெற்றியை மிகவும் மகிழ்ந்து கொண்டாடினர். தேவர்களோ பய மடைந்தனர் இயல்பாகவே தமக்குத் துன்பம் செய்யும் இராட்சதர்கள் அரிய வலிமையும், சிவனருளும் பெற்ற தலைவனை அடைந்தால் இன்னும் எவ்வாறு துன்பம் செய்வார்களோ என்று அஞ்சினர். அதனை நாரதரிடம் கூறினர்.

அவர் உடனே இராவணனுடைய அரண்மனைக்கு சென்று அவனை வாழ்த்தினார். பின்னர் அவனிடம் "அசுரர் கோமானே! நீ எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்திருக் கக் காரணம் என்ன? அதை நான் அறிந்து கொள்ள லாமா? என்று கேட்டார்.

இராவணன் அவரிடம் மகா முனியே, "நான் கடுமையான விரதங்களை நோற்று ஆயிரம் வருடங்கள் தவம் செய்தேன். சிவபெருமான் என் முன்பு தோன்றவில்லை. நான் பெரிய வேள்வி குண்டத்தினை அமைத்து என் தலைகளை ஒவ்வொன்றாக அரிந்து ஹோமம் செய்தேன். இப்படி ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு தலை வீதம் வெட்டி வேள்வி செய்து ஒன்பதாயிரம் ஆண்டுகள் கடுந் தவம் செய்தேன். பத்தாவது தலையை வெட்டிக் கொள்ள முயலும்போது பரமசிவன் எனக்குக் காட்சியளித்தார். எனது தவத்தினை மெய்ச்சி அனேக வரங்களையும், வலிமையையும் தந்தார். எனது ஒன்பது தலைகளும் முன்போலவே எனக்கு மீண்டும் உண்டாகவும் அருள்புரிந்தார். இதனால் நான் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தேன்" என்றான்.

இதைக் கேட்ட நாரதர், "அரக்கர் கோமானே! நீ அனேக வாழ்நாளும், வலிமையும் பெற்றது கண்டு நான் மகிழ்ந்தேன். என்றாலும் சிவபெருமான் நஞ்சுண்டு மயக்கமடைந்தவரல்லவா? அவர் தனது மயக்கத்திற் கூறிய சொற்களை நம்பலாமா? என்பதைச் சோதித்து அறிய வேண்டாமா? அவர் உனக்கு வரங்கள் அளித்தது உண்மை யானால் நீ அவர் எழுந்தருளியுள்ள கயிலை மலையை எளிதாகத் தூக்கி விடலாம். ஆதலால் நீ சென்று கயிலை

மலையை உனது தோள்களால் தூக்கிப் பார். அது முடிந்தால் அவர் தந்த வரங்கள் உனக்கு சித்தியாகி விட்டன என்று பொருள். நீ எடுத்ததைப் போலவே அந்த மலையை அங்கேயே திரும்ப வைத்துவிடு" என்றார்.

இராவணனுக்கும் இது சரியென்று பட்டது. உடனே இமயமலையின் அடிவாரத்திற்குச் சென்று கயிலை மலையை அப்படியே பெயர்த்தெடுத்துத் தூக்கினான். இதனால் அம்மலை குலுங்கியது. பிரமன், விஷ்ணு முதலியோர் தலைகுப்புற விழுந்தனர். தேவர்களும், முனிவர்களும் பிரதம கணங்களும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து வருந்தினர் பரமேசுவரனும் ஒரு கணம் ஆடினார். அவர் அருகில் இருந்த பார்வதி, சுவாமி இது தங்கள் பக்தனான இராவணன் செய்யும் அடாத செயல் உமது வரத்தைச் சோதிக்கவே இவ்வாறு செய்தான் என்றாள். இதனால் சிவபெருமானுக்கு கடும் கோபம் உண்டாயிற்று. "இராவணனே கயிலையைக் குலுக்கிய உனது கரங்களை வெட்டி வீழ்த்த ஒருவன் விரைவில் பிறந்து உன்னை அழிப்பான்" என்று சாபம் இட்டார். அதனைக் கேட்டு நாரதர் மகிழ்ந்தார். தேவர்களும் மகிழ்ந்து பூமாரி பொழிந்தனர். இராவணன் இவை எதையும் அறியாமல் சிவன் தனக்களித்த வரம் சித்தியாகி விட்டது என்று அடங்காத கர்வம் கொண்டான். அந்த மலையை மீண்டும் அதனிடத்திலேயே வைத்துவிட்டு இலங்கைக்குச் சென்றான். இக்கதையின் மூலம் இராவணன் தன் வலியைச் சோதிக்கவே கயிலை மலையை எடுத்தான் என்பதை அறிய முடிகிறது.

### இராவணனின் சிரமாலையை ஏற்ற சிவன் :

இராவணனுடைய பக்தி அளவிட முடியாது. புலத்தியனின் பேரனும் விசுவாவசுவின் மகனுமான இராவணன் ஒருமுறை தனது தந்தையின் விருப்பப்படி இமய மலைச் சாரலுக்குச் சென்று சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து கடுந்தவம் மேற் கொண்டான். நெடுங்காலமாயிற்று சிவன் அவன் முன் தோன்றவில்லை. அதனால் அவன் தன்னையே அழித்துக்கொள்ள முடிவெடுத்தான். ஆயிரம் ஆண்டு களுக்கு ஒன்று வீதம் தன் ஒன்பது தலைகளையும் அரிந்து மாலையாக்கி சிவலிங்கத்திற்கு அணிவித்து இன்னும் கடுமையான தவத்தை மேற்கொண்டான். அப்போதும் இறைவன் அவன் முன்பு தோன்றவில்லை இறுதியில் தன் ஒரே தலையையும் வெட்டிக் கொள்ள முயன்றான். இனியும் அவனுடைய பக்தியைச் சோதிக்க விரும்பாத சிவன் அவன் முன்பு தோன்றினான். அவன் என்ன வரம் கேட்டாலும் தருவதாக உறுதி கூறினார்.

அவன் அவர் திருவடிகளைத் தொழுது பலவரங்களைக் கேட்டான் அவற்றில் முக்கியமானவை முப்பத்து முக்கோடி வாழ்நாள். யாவரையும் நொடியில் வெட்டி வீழ்த்தும் சந்திரகாசம் எனும் வாள். இராவணேச்சுவரன் என்னும் பட்டம் முதலியனவாகும். சிவபுராணத்தில் விபரிக்கப்பட்டுள்ள இக்காட்சியை கலைஞர்கள் சிற்பங்களாகச் செய்து மகிழ்ந்துள்ளதை வட இந்தியாவில் பல இடங்களில் காணலாம்.

(வால்மீகி ராமாயணம், ஒட்டக் கூத்தரின் உத்திர காண்டம் ஆகியவற்றில் இராவணன் பிரம்மனை நோக்கித் தவம் செய்து தன் சிரங்களை அரிந்து வேள்வி செய்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் சிவமகாபுராணம் அவன் சிவபெருமானுக்குத் தன் தலைகளை அரிந்து மாலையாக்கி அணிவித்ததாகக் குறிப்பிடுகின்றது. அக்கால கலைஞர்கள் இந்தக் கதையைக் குறிக்கும் வகையில் பல சிற்பங்களை வடித்துள்ளனர்.

**இராவணலிங்கம் :**
**(கோகர்ணநாதர்)**

இராவணன் உலகெங்கிலும் உள்ள அனைத்துச் சிவாலயங்களிலும் சிவபூசை செய்து மகிழ்ந்தவன். இவன் ஒருமுறை கயிலையங்கிரிக்குச் சென்று சிவபிரானைத் தனது வேத கானங்களினால் துதித்தான். அதற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவனிடம் வேண்டிய வரங்களை கேட்கும்படி கூறினார்.

அப்போது இராவணன் தன் தாயார் பூசிப்பதற்காக ஒரு சிவலிங்கத்தை அவர் திருமேனியிலிருந்து உண்டாக்கித் தருமாறு வேண்டினான்.

சிவபெருமானும் அவனுடைய வேண்டுகோளையேற்றுத் தன்னிடமிருந்து ஒரு சிவலிங்கத்தை உண்டாக்கி அவனிடம் அளித்து இதை வழியில் எங்கும் வைக்காமல் இலங்கைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

அவனும் மகிழ்ச்சியுடன் அதனைப் பெற்றுக் கொண்டு இலங்கைக்குப் பயணமானான்.

இதனைக் கேட்ட தேவர்கள் பயந்தனர். சிவபெருமான் அளித்த சிவலிங்கம் இலங்கையில் நிலைபெற்று விட்டால் அவ்விடம் இன்னொரு கயிலாயமாகிவிடும். அதன் எல்லைக்குள் இருக்கும் இராவணனை பின்னர் வெல்ல முடியாமல் போய்விடும். எனவே இந்த லிங்கத்தை இலங்கைக்கு எடுத்துச் செல்லாமல் தடுக்க வேண்டும் என்று விநாயகரிடம் சென்று வேண்டினர்.

விநாயகப்பெருமான் அவர்களுக்கு அபயமளித்தார். அவர் வருணனை அழைத்து, "நீ சென்று இராவணன் வயிற்றில் நீரைச் சுரக்கச் செய்வாய்" என்றார். அதன்படியே அவன் இராவணனின் வயிற்றில் புகுந்து நீரைச் சுரக்கச் செய்தான். இதனால் இராவணனுக்கு நீர் கழிக்க வேண்டிய அவசரம் உண்டாயிற்று சுற்று முற்றும் பார்த்தான் யாரும் காணப்படவில்லை. கையில் சிவலிங்கத்தை வைத்துக் கொண்டு நீர் கழிக்கவும் கூடாது. சிவலிங்கத்தை கீழே வைக்கவும் முடியாது என்பதால் அவன் மிகவும் திண்டாடினான்.

அப்போது விநாயகர் அவன் முன்னே ஒரு சிறுவனாகத் தோன்றினார் அவன் அவரை அழைத்து, "அப்பனே இந்த லிங்கத்தைச் சிறிது நேரத்திற்கு வைத்துக் கொள் நான் ஆற்றிற்கு சென்று விட்டு உடனே திரும்பி வருகிறேன்" என்றான்.

அவர், "மன்னா! இந்தச் சிவலிங்கம் மிகவும் பலம் உள்ளதாக உள்ளது. இதனைக் கீழே வேறு வைக்கக் கூடாது என்கிறாய். என்னால் இந்தப் பளுவை வெகு நேரம் தாங்க முடியாது என்னால் முடியாதபோது மூன்றுமுறை உன்னை அழைப்பேன். அதற்குள் நீ வரவில்லையென்றால் இதனைக் கீழே வைத்துவிடுவேன். பிறகு என்னைக் கோபிப்பதால் பயனில்லை" என்றார்.

இராவணனுக்கு அப்போது மிகவும் அவசரமாக இருந்ததால் அவர் சொன்னதற்கு உடன்பட்டு சிவலிங்கத்தை அவரிடம் கொடுத்து விட்டு ஆற்றை நோக்கி நடந்தான்.

சிறிது நேரம் கழிந்த பின் விநாயகர் மூன்றுமுறை அவனை அழைத்தார். அவருடைய குரல்கேட்டு அவன் வேகமாக ஓடிவந்தான். என்றாலும் மூன்றாவது முறை அழைத்த அழைப்புக்குள் அவன் வராததால் (சிறுவனாக வந்த விநாயகர்) சிவலிங்கத்தை கீழே வைத்து விட்டார். வேகமாக ஓடி வந்த இராவணன் இதைக் கண்டு வருந்தினான்.

எப்படியாவது அந்த லிங்கத்தை பெயர்த்தெடுக்க வேண்டுமென்று தன் பலங்கொண்ட மட்டும் அதனைப் பற்றி இழுத்தான்.

அவன் அன்பிற்கு உட்பட்ட சிவலிங்கம் குழைந்து பசுவின் காது போல ஆனதேயன்றி அந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து வரவில்லை.

பலவாறு முயன்ற இராவணன் இறுதியில் சோர்ந்துபோய் இவர் "மகாபலேசுவரர்" என்று கூறி அங்கேயே பூசையைச்செய்துவிட்டு தன்னாட்டிற்குச் சென்றான்.

இப்பெருமான் பசுவின் காது போல் குழைந்து நீண்டு விளங்குவதால் கோகர்ணநாதர் (கோ-பசு, கர்ணம்-காது, கோகர்ணம் - பசுவின்காது) எனவும் இந்த இடம் கோகர்ணம் எனவும் பெயர் பெற்றது. கோகர்ணம் எனும் இத்தலம் கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹூப்ளி எனும் ஊரில் இருந்து 95ஆவது மைலில் உள்ளது.

இதனை துளுவ நாட்டுப் பாடல் பெற்ற தலமாகக் கூறுவர். இத்தலத்திற்கு மங்களூரிலிருந்தும் உடுப்பியிலிருந்தும் செல்லலாம்.

இதே போன்று கதை திரிகோண மலையிலும் வழங்குகின்றது. அதனைத் தொடர்ந்து காணலாம்.

இவை இரண்டும் தன் தாயின் மீதும் அவளுடைய சிவ பக்தியின் மீதும் இராவணன் கொண்டிருந்த பெரும் பற்றினையும் அன்பையும் காட்டுகின்றன.

**இராவணனின் அன்னை வழிபட்ட திரிகோணமலை :**

இலங்கையிலுள்ள முக்கியமான சிவத்தலம் திரிகோணமலையாகும். இது இலங்கையின் வடகிழக்குக் கடற்கரை ஓரத்தில் உள்ள தலமாகும். கயிலை மலையின் கொடு முடிகளில் ஒன்று விழுந்த இடம். இங்கு சுயம்பு வடிவமாகப் பெருமான் எழுந்தருளி யிருந்தார். ஒரு சமயம் இந்த மூர்த்தியைக் கண்டு பேரானந்தம் அடைந்த இராவணனின் தாயான கைகசி தினமும் இங்கு வந்து பூசை செய்யும் வழக்கத்தை மேற்கொண்டாள். இதனால் அவளுடைய பூசைக்கு அதிகநேரமானது. இதை உணர்ந்த இராவணன் இந்த லிங்கத்தைப் பெயர்த்தெடுத்துச் சென்று தனது தாயின் மாளிகையில் வைத்துவிட எண்ணினான். அதன்படியே இங்கு வந்து லிங்கத்தைப் பெயர்த்தெடுக்க முயன்றான். எவ்வளவு முயன்றும் அவனால் அந்த லிங்கத்தைப் பெயர்த் தெடுக்க முடியவில்லை. எனவே கடுங்கோபம் கொண்டு தனது வாளை ஓங்கி அருகிலுள்ள பாறையில் அடித்தான். அப்பொழுது அங்கிருந்த பாறை வெட்டுப்பட்டு பிளந்தது. அந்தப் பிளவு பல நூறு அடி ஆழம் கொண்டது. அதில் கடலலைகள் வந்து மோதி பெருஞ்சத்தம் உண்டாக்குவதை இன்றும் காணலாம்.

தனது ஆற்றலால் சிவபெருமானை அடைய முடியாது என்பதை உணர்ந்த அவன் அன்பு கொண்டு கரைந்துருகி வேண்டினான். பெருமான் அவனுடைய தாயின் அரண்மனை உள்ள திக்கில் தன் தலையை வளைத்து இங்கிருந்தே தினமும் அவளுடைய பூசையை ஏற்றுக் கொள்ளுகின்றேன் என்று கூறி அவனை அனுப்பி வைத்தார். சற்றுத் தலை வளைந்து கோணலாக இருப்பதால் அன்று முதல் இவர் "கோணப்பிரான்" என்று அழைக்கப் பெற்றார். இங்குள்ள அம்பிகையின் பெயர் மாதுமையாள் என்பதாகும்.

முதலில் இராமபிரானால் இராவணன் வெல்லப்பட்டபிறகு அவனால் அங்கு வழிபடப்பட்ட லிங்கங்கள் யாவும் கடலில் மூழ்கி விட்டன. அதன்படியே ஆதி கோணப் பிரானும் கடலில் மூழ்கிவிட்டார். பின்னர் இராவணனைக் கொன்ற பாவம் நீங்கப் பஞ்சமித் திதியில் இராமபிரான் இந்த இடத்தில் லிங்கம் அமைத்தார். விபீஷணனின் ஆட்சிக்குப் பிறகு

அதுவும் மூழ்கி விட்டது. பின்னர் அன்பர்கள் புதிதாக இவ்விடத்தில் கோணப் பிரானை அமைத்து வழிபாடு செய்து வந்தனர்.

பின்னாளில் போர்த்துக்கீசியர் படையெடுத்து வந்தனர். அன்பர்கள் கோணப் பிரானையும், உலாத்திரு மேனிகளையும் பாதுகாப்பிற்காக பூமிக்கடியில் புதைத்து மறைத்து விட்டனர். போர்த்துக்கீசர் ஆத்திரம் கொண்டு கோயிலை தரைமட்டமாக்கி விட்டனர். நெடுநாள் அங்கு ஆலயம் இல்லாமல் இருந்தது. அங்கிருந்த பாறையின்மீது வெள்ளிக்கிழமை தோறும் அன்பர்கள் கூட்டாக வழிபாடு செய்து வந்தனர். பின்னர் அண்மையில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பெற்று புதியதாகக் கோணப்பிரானுக்கு ஆலயம் அமைத்து குடமுழுக்கு செய்யப்பட்டது.

**இராவணேசுவர வாகனம் :**
**(கைலாச பர்வத வாகனம்)**

இந்திய மரபில் இறைவனை மலையின் மீது அமர்த்தி வழிபடுவது மரபு. சிவபிரானைக் கைலாய மலையிலும், திருமாலை வேங்கட மலையின் மீதும், முருகனைக் குன்றுதோறும் எழுந்தருளியிருப்பதாக கொண்டு வழிபடுகின்றனர்.

ஜைனர்கள் தீர்த்தங்கரர்களுடைய பஞ்ச கல்யாண விழாவில் இரண்டாவது கல்யாண நிகழ்ச்சியாக அவரை மேரு மலையின் மீது அமர்த்தி ஜென்மாபிஷேகம் செய்ததன் நினைவாக உயர்ந்த மேடையின் மீது அமர்த்தி அபிஷேகம் செய்வர். பௌத்தர்கள் கிருத்திரகூடம் எனும் மலையின் மீது புத்தபிரான் அமர்ந்து அறம் பகர்ந்ததை நினைவு கூறுவர். ஏசுபிரான் மலையின் மீது அமர்ந்து உபதேசித்த மலைப் பிரசங்கத்தை கிருத்துவமறை கூறுகின்றது.

இந்த அடிப்படையில் பெருந் திருவிழாவில் மலைபோன்ற ஒரு வாகனத்தில் வைத்து இறைவனை திருவீதி உலா காண்பது ஒரு வழக்கமாகியது. சிவாலயங்களில் கயிலாய மலை வாகனமும், முருகன் ஆலயங்களில் அஸ்தமான கிரியும், திருமால் கோயில்களில் மங்கள கிரியும் வாகனங்களாக அமைகின்றன. சிவாலயங்களில் அமைந்த கயிலாய வாகனம் ஒரு மலையைப் போல மட்டும் அமையாது இராவணனின் கதையோடு தொடர்புபடுத்தி அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றிலும் மலையைப்போன்ற அமைப்பு அதில் பாம்புகள், ரிஷிகள், கொடிகள் இவற்றுடன் புலி, சிங்கம் போன்ற விலங்குகளும் செதுக்கப் பட்டுள்ளன. நடுவில் இராவணன் முழந்தாள் இட்ட நிலையில் உள்ளான். இவனுக்கு ஒன்பது தலைகள் அமைந் துள்ளன. பத்தாவது தலையைப் பறித்து வீணையைப் போல அமைத்து அதனை இரு கைகளில் ஏந்தி மீட்டும் கோலத்தில் உள்ளான். மற்றப் பதினெட்டுக் கைகளிலும் பல வகையான ஆயுதங்கள் உள்ளன.

பெருந் திருவிழாவின் ஒன்பதாம் நாள் இரவில், கயிலாச பர்வதம் என்றழைக்கப்படும் இந்த இராவணனேசுவர வாகனத்தில் இறைவன் அலங்காரத்துடன் பவனி வருகின்றார்.

இந்த விழாவில் * இறைவனை வீணை மீட்டும் கோலத்தில் அலங்காரம் செய்வது சிவ தலங்களிலுள்ள வழக்கமாகும். மேலும் அருகில் உள்ள தேவி அச்சங்கொண்டு இறைவனை அணைத்துக்கொள்ளும் பாவனையில் அலங்கரிப்பார்.

இந்தக் காட்சியை காண்பவர் எத்தகைய பெருவலிமை படைத்தவனும்

---

* திருப்பாசூர் தேவாரத்தில் அப்பர் பெருமான் கை கிளரும் வீணை வலவன் கண்டாய் என்று சிவபெருமான் வீணை வாசித்து மகிழ்வதைக் கூறுகின்றார்.

இறைவனுக்கு அடங்கியவனே என்பதையும், இறைவனை மனமுருகி வழிபடுவதால் எல்லா நலங்களையும் பெறலாம் என்பதையும் உணர வேண்டும். இதுவே இவ்விழாவின் குறிக்கோளாகும். இராமேசுவரத்தில் தங்கத்தாலும், காஞ்சிபுரத்தில் வெள்ளியாலும் செய்யப்பட்ட இராவணேசுவர வாகனங்கள் உள்ளன, பொதுவாக இந்த வாகனங்கள் மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் அழகாக விளங்குகின்றன.

சென்னை அரண்மனைக்காரன் தெருவில் உள்ள ஸ்ரீகச்சாலீசுவரர் ஆலயத்தில் வாயிலுக்கு நேராக உள்ளே சென்றதும் தரிசிக்கத் தக்க வகையில் கதைச் சிற்பமாக இராவணேச்சுவர கயிலாய பர்வதக்காட்சி பெரிய அளவில் செய்யப்பட்டுள்ளது. இங்கு இக்காட்சியை அப்பர் காணும் கயிலைக் காட்சியோடு இணைத்து இணையாக வரும் பசுக்கள், யானைகள், குயில்கள், மயில்கள் ஆகியவற்றோடு செய்துள்ளனர். அப்பரடிகள் திருஉருவமும் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் பிரகாரத்தில் இராவணன் கயிலையை எடுப்பது போன்ற மலை அமைப்பையும் அதன் மீது சோமாஸ்கந்தர் சந்நிதியும் அமைந்துள்ள மண்டபத்தையும் காணலாம். இது நெல்லைக் கயிலாயம் என்று போற்றப்படுகின்றது.

திருஇடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்தின் பிரகாரத்தில் கட்டுமலை ஒன்று அமைக்கப்பெற்று அதன் மீது சோமாஸ்கந்தரின் திருமேனி அமைக்கப்பெற்றுள்ளது. இந்த மலையை இராவணன் தாங்குவதுபோல அமைந்துள்ளது. இதன் மீது ஏறிச் செல்ல குறுகலான படிகள் உள்ளன. இதனை மத்திய கைலாயம் என்பர்.

**கயிலாய நாதர் சிற்பங்கள்:**

இந்திய சமயச் சிற்ப வரலாற்றில் தனியிடம் பெற்றது இராவணன் கயிலையைத் தூக்கிச் சிவனருள் பெற்றதைக் குறிக்க அமைந்த சிற்பமாகும். இதனை சிற்ப வல்லுநர்கள். தங்கள் கற்பனையில் கண்டு அனுபவித்துப் பெரிய அளவில் கலை நயம் மிக்கதாக அமைத்துள்ளனர்.

காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மயிலாப்பூர் முதலிய அநேக ஆலயங்களில் இராஜகோபுரத்தில் பெரிய அளவில் கதைச் சிற்பமாக இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மதுரை ஆலயத்தில் பெரிய தூண் சிற்பமாகவும் இந்தக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

வட நாட்டில் உள்ள சிற்பக் கலைக்கூடமான எல்லோராவில் அமைந்துள்ள இத்தகைய சிற்பம் உலகப் புகழ் பெற்றதாகும். இதில் இராவணன் நமக்கு முதுகுப் புறத்தைக் காட்டிக் கொண்டு பூமியை அகழ்ந்து கயிலை மலையினை வேரொடு பறித்தெடுத்து தூக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான். அவன் மண்டியிட்டு உடலை முறுக்கிக் கொண்டு முழுப் பலத்தையும் திரட்டி மலையைத் தூக்க முற்படுவதையும் மலையின்மீது பார்வதியும் பரமசிவனும் வீற்றிருப்பதையும் அவர்களைச் சுற்றி கணங்கள் நின்றிருப்பதையும் இந்தச் சிற்பத்தில் காணலாம். மலையிடுக்குகளில் பூத கணங்களும் காட்டப் பட்டுள்ளனர்.

**இராவணனுக்கு அருள் செய்த இராவணன் :**

சிவபெருமானுக்கும் இராவணன் என்பது பெயராகும், இராவணம் என்பதற்கு பொன் என்பது பொருள், சிவபெருமான் பொன்வண்ணம் கொண்டவராதலால் இராவணன் என்று பெயர் பெற்றார். இராவணன் என்பதற்கு (இரா+வண்ணம்) இரவு போன்ற கருத்த

வண்ணம் கொண்டவன் என்ற பொருள் கூறி இலங்கை வேந்தனுக்கு அப்பெயர் வந்ததற்கான காரணத்தை கூறுவர். இராவணன் என்பதற்கு அழுபவன் என்ற பொருளையும் கூறுவர்.

கயிலை மலையின் கீழ் அகப்பட்டு பெருமான் கால் விரலால் ஊன்றிய பாரம் தாங்காது மலங்கி வாய் கிழிய அழுதான். அதனால் அழுபவன் என்ற பொருள்பட அவனுக்கு இராவணன் என்ற பெயர் வழங்கப் பெற்றது. இறைவன் இலங்கை மன்னனுக்கு இராவணன் என்ற பெயர் வழங்கியதை கொற்ற வாளொடு நாமமும் கொடுத்தார் என்றும், எண்ணும் பெயரும் ராவணனே எய்தும் பெயரும் இராவணனே என்றும் தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானுக்கு இராவணன் என்ற பெயர் உள்ளதைக் குறிக்கும் தேவாரம் வருமாறு,

இராவ ணஞ்செய மாமதி பற்றவை
இராவ ணம்முடை யான்தனை யுள்குமின்
இராவ ணன்தனை யூன்றி அருள்செய்த
இராவ ணன்திரு வெண்கா டடைமினே.

**பொருள்:-**

அறிவைப் பற்று இல்லாதபடி செய்வதற்கு இராவணம் என்னும் யானையின் மீது ஏறி வரும் சிவபெருமானை உள்ளத்தே நினைமின். இலங்கை அதிபனாகிய இராவணனைச் கட்டை விரலால் ஊன்றி அவன் தொழுதபின் அவனுக்கு அருள் செய்த பொன்போன்ற சிவபெருமானின் திருவெண்காடு அடையுங்கள் (திருவெண்காட்டில் கரிய மேனி உடையவராக சிவ மூர்த்தி அகோரர் என்ற பெயரில் எழுந்தருளியுள்ளார். இராவணன் - என்பது அவரைக் குறிக்கும் என்று பல உரை ஆசிரியர்கள் எழுதியுள்ளனர் இரவு + வண்ணம் = இராவணம் கருப்பு நிறம்)

**இராவணன் பாடிய சாம வேதம் :**

சிவபெருமானுக்கு இசைப்பிரியன் என்பது பெயர். ஏழிசையாய் இசைப் பயனாய் என்று இசையாகவும் அதன் இனிமையான கேட்டற் சுகமாகவும் இறைவன் இருப்பதை திருநாவுக்கரசர் பாடியருள்கின்றார். இராவணன் இசையில் வல்லவன். சாமகானம் பாடுவதில் தலைசிறந்தவன். தான் இசை பாடுவதில் வல்லவன் என்பதை உணர்த்தத் தனது கொடியில் வீணையை சின்னமாகக் கொண்டிருந்தான். இதனால் வீணைக் கொடியுடைய வேந்தன் என்பது அவனுக்குப் பெயராயிற்று. அவன் நாள்தோறும் தன் இசையால் சிவபெருமானைப் பூசித்தவன். அவன் கயிலை மலையைத் தூக்கி அதன் கீழ் அகப்பட்டுக்கொண்டபோது சாம கீதம் பாடினான். சாம வேதத்தில் வரும் இனிய சுவரங்களை உடைய பாடற் பகுதிகளுக்குச் சாமகீதங்கள் என்று பெயர்.

எத்தனையோபேர் சாமகானம் பாடினாலும் இறைவனுக்கு இராவணன் பாடிய சாமகானமே பிடித்தமாயிற்று. அதனைக் கேட்டு உருகிய அவர் அவனுக்கு அருள் செய்தார். இதனால் சிவனடியார்களுக்குச் சாமகானம் என்றதும் இராவணனும் அவனுக்கு சிவன் அருள் பாலித்த வரலாறுமே நினைவுக்கு வருகின்றது.

இறைவன் சாமவேதப் பிரியன் என்பதால் அவனுக்கு சாமநல்வேதன், சாகை ஆயிரமுடையார், சாமம் ஓதுவதுடையார் என்பன பெயராயின.

**இராவணன் வழிபட்ட முப்பத்து முக்கோடி லிங்கங்கள் :**

இராவணன் முப்பத்து முக் கோடி வாழ்நாளைப் பெற்றவன். அவன் ஒரு நாளைக்கு ஒன்று வீதம் ஒவ்வொருநாளும் புதியதாக அமைத்து

வழிபட்ட 33கோடி லிங்கங்கள் இலங்கையில் இருந்ததென்று கூறுவர். இராவணனை வென்று இராமபிரான் இலங்கையை அழித்தபோது அவை யாவும் கடலில் மூழ்கிவிட்டன என்பர்.

**இராவணன் மனைவி வண்டோதரி சிவனருள் பெற்றது :**

இராவணனின் மனைவி வண்டோதரி (மண்டோதரி) மகா சிவபக்தி நிரம்பியவள். அவள் ஓயாது ஐந்தெழுத்தை ஓதுபவள். தாம் எப்போது விரும்புகின்றாளோ அப்பொழுதெல்லாம் சிவபெருமான் தனக்கு காட்சியளிக்க வேண்டும் என்று அவரிடம் வரம் பெற்றிருந்தாள். ஒரு சமயம் அவள் தனது அந்தப் புரத்தில் பள்ளி அறையில் அமர்ந்துகொண்டு சிவபெருமானைத் தியானித்து தமக்கு காட்சியளிக்க வேண்டும் என்று கேட்டாள். அதன்படியே சிவபெருமான் பள்ளிக்குப் பாயத்தினராய் அவள் முன்பு தோன்றினார். அவள் அதுகண்டு மகிழ்ந்து உரத்த குரலில் தோத்திரம் செய்தாள் அந்த ஆரவாரத்தைக் கேட்ட இராவணன் என்ன சத்தம் என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தான். அப்பொழுது பெருமான் ஒரு குழந்தையாக மாறி அழுதார். வண்டோதரியிடம் யார் இந்தக் குழந்தை என்று இராவணன் கேட்டான். அதற்கு அவள் எனது சேடியின் மகன். இன்றைக்கு அவள் என்னிடத்தில் இவனை விட்டுச் சென்றுள்ளாள் என்றாள். இலங்கையர் கோன் அங்கிருந்து சென்றுவிட்டான். குழந்தை வடிவில் இருந்த சிவபெருமான் அவளுக்கு மீண்டும் காட்சியளித்து விட்டு மறைந்தார்.

மாணிக்கவாசகர் இக்கதையை நினைவுகூர்ந்து குயில்பத்தில்,

**ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவும் தன்னுருவாம்**
**ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்கு**
**பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரான்**

என்று குறித்துள்ளார். இதன் பொருள் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த தென்னிலங்கையின் அரசியான அழகு நிறைந்த் வண்டோதரிக்கு உலகிலுள்ள எல்லா உருவங்களையும் தன் வடிவமாய்க் கொண்ட சிவபெருமான் பெரிய அருளைச் செய்து இன்பமளித் தான். அவன் பெருந்துறையில் உறைபவன் என்பதாகும்.

உருத்திரகோசமங்கைத் தல புராணத்திலும் சிவபெருமான் வண்டோதரியின் வேண்டுகோளின்படி இலங்கைக்குச் சென்று அவளுடைய பூசையை ஏற்றார் என்றும், அப்போது அங்கு இராவணன் வரக் குழந்தையாக மாறி விட்டார் என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

**ஐந்தெழுத்தோதும் வண்டோதரியும் - இராவணனும்**

திருஞானசம்பந்தர், வேதியர்களுக்கு ஐந்தெழுத்தின் உண்மையின் பெருமையை விளக்கிக் கூறும் வகையில் பாடிய "துஞ்சலும்" என்று தொடங்கும் பாசுரத்தில் எட்டாவது பாடலில் "வண்டமர் ஓதி மடந்தை பேணின்" என்றும் பண்டை இராவணன் பாடி உய்ந்தன என்று குறித்துள்ளார். வண்டோதரி எப்பொழுதும் ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே யிருப்பதால் இந்தப் பதிகத்தில் அவளைச் சிறப்புடன் குறித்தார். பின்னும் அவள் கணவனான இராவணனை நினைந்து அடுத்த அடியில் பண்டு இராவணன் பாடி உய்ந்தது என்றும் அருளிச் செய்தார். இப்படிக் கணவன், மனைவி இருவருமே மாபெரும் சிவபக்தர்களாக விளங்கியதால் இருவரையும் திருஞானசம்பந்தர் ஒரே பாடலில் இணைத்துப் பாடியுள்ளார்.

நன்றி . சிவமஞ்சரி, தொகுதி 1.

# தேரின் தத்துவம்

**தேவாலயம் :**

"தேவாலயமாவது எங்கும் வியாபகராய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம்". என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நான்காம் பால பாடத்தில் விளக்கியுள்ளார்கள். கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம் அல்லது ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் என்று பொருள் கோடலு மொன்று. ஆலயங்கள் நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்தியாங்கம், காமிகம், காமிகாங்கம் என்னும் "ஆறு உறுப்புக்களானும்" நடத்தப்படும். நைமிகத்துள் ஒன்றுதான் மஹோற்சவம்[1].

**உற்சவம் :**

"உற்சவம் என்னும் சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. (உத்-மேலான, சவம்-ஐந்தொழில்; உத்-ஞானம், சவம்-போக மோட்சம்) மேலான ஞானத்தையும், போக மோட்சத்தையும் கொடுப்பதென்பது ஒரு கருத்து. சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ் செய்து உயிர்களைக் காக்கும் முறையை திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுட் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த் திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையுங் குறிக்கும்.

எவ்வாறெனில், முதல்நாள்சரீரத்தை உண்டாக்குதலையும், இரண்டா நாள், நல்வினை தீவினையைப் பயன்படுத்தலையும், மூன்றா நாள் முக்குணங்களை எழுப்புதலையும் நாலாநாள் உட்கருவிகளை முயற்பித்தலையும், ஐந்தா நாள் ஞானேந்திரியங்களை வசப்படுத்துதலையும், ஆறாநாள் ஆசை முதலியவைகளைக் கெடுத்தலையும் ஏழா நாள் எழுவகை மந்திரங்களைப் பதித்தலையும், எட்டா நாள் பாச ஞானம் நீங்குதலையும், ஒன்பதா நாள் மும்மலங்களையும் கெடுத்தலையும், பத்தா நாள் சிவானந்தத்தைக் கொடுத்தலையுங் குறிக்குமென்பர். பத்து நாட்களுக்கு மேற்பட்ட திருவிழாக் காலத்தையும் அதில் குறைந்த காலத்தையும், இத்தொழில்கள் அமையத்தக்கதாக வகுத்துக் கொள்ளலாம்[2]".

இனி உற்சவங்களின் உட்கருத்தை நாவலர் ஐயா அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்:

"மகோற்சவ நாள் பத்தினுள், முதனாள் விழாத் தூலநீக்குதற் பொருட்டும், இரண்டா நாள் விழாத் தூலசூக்கும நீக்குதற் பொருட்டும், மூன்றாநாள் விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதற் பொருட்டும், நாலாநாள் விழா நாற்கரணமும், நால்வகைத் தோற்றமும் நீக்குதற் பொருட்டும் ஐந்தாநாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும், ஐந்து மலமும் நீக்குதற் பொருட்டும், ஆறாநாள் விழா காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீக்குதற் பொருட்டும் ஏழா நாள் விழா எழுவகைப் பிறப்பும் கலாதிகளேழும், மாயாமல

1. மகோற்சவ சந்திரிகை – பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்.
2. சைவக் கிரியை விளக்கம் – சு. சிவபாதசுந்தரம்

குண மேழும் நீக்குதற் பொருட்டும், எட்டா நாள் விழா எண் குணமும் விளக்குதற் பொருட்டும், ஒன்பதாநாள் விழா மூன்றுருவும், முத்தொழிலும் மூன்றிடத் துரைத்தலும், இலையெனற் பொருட்டும் பத்தாநாள் விழா பரானந்த மாக் கடலில் அழுத்தற் பொருட்டுஞ் செயற்படுதலால், சிவோற்சவ காலத்திப் படிக்கலாகாதென்றார். இவையெல் லாம் விம்ப தந்திரத்திற் சிவோற்சவ படலத்திற் காண்க.[1]"

**இரதோற்சவம் :**

தேவாலயங்களில் நடைபெறும் இரதோற்சவத்தில் உபயோகிக்கப்படும் தேரின் தத்துவங்கள் யாவை என்பதைச் சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை அவர்கள் அழகாக விளக்கியுள்ளார்கள்.

**ஏழாநாள் விழா :**
**(இரதாரூட திருக்காட்சி)**

"ஏழாநாளிலே இரதாரோகண திருக்காட்சியுண்டாம் இது சில ஆலயங்களில் ஒன்பதாம் நாளினுஞ் செய்யப்படும்.

இதனுண்மையை விவரணம் பண்ணுங்கால், ஆதிகாலத்திலே தடங் கருணைப் பெருங்கடலெந்தையாகிய சிவபெருமான், மந்தரகேசரி மலைகள் அச்சாகவும். சூரிய, சந்திரர்கள் சக்கரமாகவும். ஆறிருதுக்கள் சந்தியா கவும், பதினான்கு லோகமும் பதினான்கு தட்டுகளாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதயாத்த மலைகள் கூவிரமாகவும், நதிகளும், நதங்களும் கொடிகளாகவும், நக்ஷத்திரங்கள் விதானமாகவும், மோக்ஷலோகம் மேல் விரிவாகவும், யாகங்கள் சட்டங்களா கவும், நாள் முதலியன இடுக்கு மரமாகவும், அட்ட மலைகள் தூண் களாகவும் அட்டயானைகள் தாங்குவன வாகவும், சத்த சமுத்திரங்கள் திரைச் சீலைகளாகவும், கன்மஞானேந் திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், வேதாங்க உபாங்க மநுசாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் பூட்டப்படும் குதிரைகளா கவும் அமைக்கப்பட்ட இரதத்திலே எழுந்தருளி, கங்கை முதலிய தேவ மாதர்கள் சாமர மிரட்டவும், ஊர்வசி முதலிய கணிகை மகளிர் நடனஞ் செய்யவும், மகாமேரு மலையை வில்லாகவும், சரசுவதியை வில்லிற் கட்டிய மணியாகவும், வாசுகியை நாணாகவும், விஷ்ணுவைப் பாணமாகவும், அக்கினி தேவனை அவ்வம்பின் கூர்வாயாகவும், வாயுதேவனை அம்பிற காகவுங் கொண்டருளி பிரமனாகிய சாரதி பிரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த திரிபுர அவுணர் களைத் தந்திருப் புன்னகை யக்கினியால் நீறாக்கியருளினார், என்னும் வரலாற் றுண்மையை காட்டுவதே இவ்விரத சேவைக் காட்சி என அநுமிக்கப்பட்டு விஸ்வரூபியாயும், விஸ்வகார ணராயும், விஸ்வசேவியராயும், விஸ்வாந்தரியாமி யாயும் இருப்பவர் சிவபெருமானே யென்பதும், முப்புரமென்பது, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல காரியங்கள் எனவும், அத்திரிபுரங் களையும் நீறாக்கி, தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னும் மூவர்களையும் தேவர் களையும் அடிமையாகக் கொண்டு அவர்கட்குத் தம் பதம் அருளி இன்பம் கொடுத்தமை, மும்மல காரியங்களையும் கெடுத்து விஞ்ஞானாகலர், பிரளயா கலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக் களையும் அடிமையாகக் கொண்டு திருவடி முத்தி

1. சைவசமய நெறியுரை – ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

கொடுக்கும் உண்மை யெனவும், அறிய நின்றதனால் எல்லா மாய், அவைகட்குக் காரணமு மாய் நிற்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக்கட்கு மும்மல பந்த வாதனை களைக் கெடுத்து திருவடிப் பேறாகிய பேரானந்தப் பெருவாழ்வளிப்பர் என்ப தும் உணரப்படும்.

திருமந்திரம்

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறி வாரே.

இங்ஙனமின்றி, தேரிலே விளங்கும் ஏக உச்சிக்குடை பிரமரந்திரமாகவும், கலசம் சோடசாந்தத் தானமாகவும், மேலுள்ள முதலாம் அடுக்கு துலாதசாந்தத் தானமாகவும், இரண்டாம் அடுக்கு மஸ்தக ஆதித்தானமாகவும், மூன்றாம் அடுக்கு மத்தியத் தானமாகவும், நாலாம் அடுக்கு மஸ்தகாந்தத்தானமாகவும், ஐந்தாம் அடுக்கு லலாட மத்திய மாகவும், ஆறாம் அடுக்கு புருவமத்திய மாகவும், நடுவுள்ள ஏழாம் அடுக்கான முப்பத்திரண்டு குத்துக்கால்கள் முப்பத் திரண்டு தத்துவங்களாகவும், முற்றுறை களே கண்களாகவும், பிற்றுறைகள் சிகைகளாகவும், பக்கத் துறைகளே இரு செவிகளாகவும், பீட முற்பகுதி வாயாகவும், இடப்பக்கத்துள்ள இரு குதிரை வடிவங்கள் இடப்பாக சூரிய சந்திர கலாவாசிகளாகவும், வலப்பக்கத் துள்ள இரு குதிரை வடிவங்கள் வலப்பாக சூரிய, சந்திர கலாவாசிகளா கவும், சாரதி வடிவம் மும்மலரூபம், நாசி என்பவாகவும், எட்டாம் அடுக்கிடப் பகுதி அந்தக்கரண சொரூபம் கண்டத் தானம் என்பனவாகவும், அதின் கீழிடப்பகுதி ஐந்தவத்தை, ஐங்கோசம் இராகாதி பதின் முக்குணம் என்ப வற்றின் ரூபமாகவும், இருதயத் தானமாகவும், அதின் கீழ்ப்பகுதி தசேந்திரியம், நாபித் தானம் ஆகவும். அதன் கீழுள்ள அச்சு பஞ்சபூதம், குண்டலி சத்தித்தானம் ஆகவும், சக்கரங்கள் தசவாயுக்களாகவும், இரு கால்களாகவுங் கொண்டு, சரீர சொரூபத்தை விளக்கி பின்னர் சக்கரங் களான தச வாயுக்களையும் நிறுத்த, அசைதன் முதலிய வினைகள் ஒழியு மெனவும், அவ்வாறுள்ள சீவன் தன் மன தத்துவத்தை, முறையே மேலாக விளங்கும் உந்திக்குண்டலியிலிருந்து நாபிக்கும், அங்கிருந்து முறையே இருதய கண்டத் தானங்களுக்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து மேலாக விளங்கும் வாய்நாசி என்பவைகளுக்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து இரு கண்கள் வழியாகவும் மேனோக்கி, ஆறாம் அடுக்காகிய புருவ மத்தியத் திற்கும் அங்கிருந்து ஐந்தாம் அடுக் காகிய லலாட மத்தியத்துக்கும், அங்கிருந்து மற்றையடுக்குகளாகிய மஸ்தக அந்தத் தானம், மத்தியத்தானம், ஆதித்தானம், துவாத சாந்தத் தானம் என்பவைகளுக்கும் அங்கிருந்து மேல் உச்சிக்குடையாகிய பிரமரந்திற்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்ஙனம் சும்மா இருந்தபடி இருக்கும் நித்திய நிரசதி யானந்த ரூபியாயிருக்க வேண்டும் என்பவும் உணரப்படும்.

இன்னும் தேர்வடிவம் சரீரமாகவும் அதில் காணப்படும் நான்கு சிங்க வடிவங்கள் ஆன்மாவின் சர்வவித சீவகாருணியமில்லா லோபகுரூரம், சர்வவித ஆசைப் பெருக்க சங்கற்ப விருத்தி, சர்வவித அபிமான கோலாகல விபரீதம், சர்வவித அகங்கார கோபதாப விகாரம் என்னும் இந் நான்குவித கர்ம விருத்திகளாகவும், எட்டு யாளி உருவங்கள் ஆன்மாவினது அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயவாசனை, நானாவிதகன்மம்,

உபாதி, அவஸ்தை என்னும் எட்டுவித அனுபவங்களாகவும், கொடிகளெல் லாம் தத்துவ கூட்டங்களாகவும், மணிகளெல்லாம் பீச மந்திர பிரணவாதி சத்தங்களாகவும், குஞ்சங்கள் எல்லாஞ் சீவர்கள் மனோசலனத்தால் எண்பத்து நான்கு லக்க யோனி பேதங்களாக மாறி மாறித் தோன்றியடையும் மரணாவத்தை யாகவுங் கொண்டு, சீவர்கள் சிங்கங் களையொத்த கர்ம விருத்திகளையும், யாழிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும், மணிகளைப் போன்ற லாக்கொலிகளையும், குஞ்சங்களைப் போன்ற மன சலன தோற்றங்களையும், இல்லையென்னும் படி செய்து சித்திர தீபம் போல நின்று மோன சாட்சாத்கார கோல நிலையில் நிற்க வேண்டும் என்பதும் இந்த லயக்கிரம திதிக் கோலத்தால் அறிவார் நுண்ணுணர்வோர்"[1].

**பல்வகைத் தேர் :**

தேர்கள் பலவகைப்பட்டன வாயினும் அவற்றின் உருவ அமைப்பில் அதிக உருவ வேற்றுமை காணப்பட வில்லை.

"தேர்கள்: மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் முதலியவை உண்டு. தேர்களில் மிகச் சிறந்த சிற்பவேலை செய்து பதிக்கப்பெறும். உருளை நான்குமுதல் பத்து உருளை வரை இருப்பது உண்டு. திருவாரூர்த்தேர் மிகப் புகழ் பெற்றது. ஸ்ரீவில்லிபுத்தூர்த் தேர் மிகப் பெரியதென்பர். தேர் ஓட்டுதல் ஒரு சிறந்த கலை, எல்லாராலும் முடியாது. புறப்பட்டபிறகு நிலைக்குச் சேர்ப்பித்தல் மிகக் கடினம். ஆயிரக் கணக்கான மக்கள் அதனை இழுக்க வேண்டும். தெப்பத்தேர், நீர்மேல் மிதக்கும் தேர். இது இக்காலத்தில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டு வெகு சிறப்பாகச் செய்யப்படு கிறது. வெள்ளித்தேர்கள் திரு வண்ணாமலை பழனி முதலிய இடங்களில் உண்டு. வாகனம், தேர் இவைகளைச் செய்யுந் தொழிலும் ஒரு சிறந்த தொழிலாகும்" என்று கூறுகிறார். இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திர செட்டியார் அவர்கள்[2].

தேர்களைப் பெரும்பாலும் தாமரை மொட்டு வடிவிலேயே அமைத்தனர் என ஊகிக்க இடமுண்டு. மேலும் கொடுஞ்சி என்ற ஓர் உறுப்பும் தேர்களிலே அமைக்கப் பெற்றிருந்தமை நோக்கற்பாலது.

**கொடுஞ்சி :**

"கொடுஞ்சியென்பது தாமரைப் பூவாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது என நச்சினார்க்கினியர் மதுரைக் காஞ்சியுரையிற் குறிப்பிட்டி ருக்கின்றார். இதனால் தமிழர்கள் தாமரைப் பூ வடிவமாகப் பொன்னாற் செய்ததுமன்றி இப்பூவடிவினதாக யானை மருப்பானும், மரத்தானும் பண்ணி, தேர் ஊர்பவர்கள் கையாற் பற்றி கோடற் பொருட்டு, இக்கொடுஞ் சியினைப் பயன்படுத்தி வந்தார்கள் என்பது தேற்றம்.

**நெடுந்தேர்க் கொடுஞ்சி பற்றி**
**நின்றோன்.** (அகம் – 110)

**மணித்தேர்க் கொடுஞ்சி கையாற்**
**பற்றி** (மணிமேகலை 4-48)

எனும் அடிகள் இதனை வலியுறுத் தும். இன்னுங் கொடுஞ்சி யென்பது தாமரைப்பூ வடிவாக மட்டுமன்றி முகை வடிவாகவுஞ் செய்யப்பட்ட தென்பது கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர் எனும்

1. சிவஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் – சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை
2. செயற்கைநலம் – இராவ்பகதூர் சி. எம். ராமச்சந்திர செட்டியார் அவர்கள்

பொருநராற்றுப்படை யடிக்குப் பொருள் கூறுமிடத்து "யானைக் கொம்பாற் செய்த தாமரை முகையினை யுடைய நெடியதேரிலே" என உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டிருத்ததால் அறியக்கிடக் கின்றது. இதனால் தாமரைப்பூ வடிவாகவும், முகை வடிவாகவும் செய்தல் பண்டைத் தமிழர் கொண்ட வழக்கென்பதறிக. பூவடிவின தாயின் இக்காலத் தாமியங்கி வண்டியினை மோட்டார் வண்டியை விரும்பிய பக்கத்துக்குத் திருப்புதற்காகச் செலுத் துபவன் கையாளற் பொருட்டு நடுவண் அமைந்திருக்கும் சிறு சில்லினை ஒக்கும்போலும். இது ஆராயற்பாலது. இன்னும் இக்காலத் தேரை உற்று நோக்கின் தாமரை முகை வடிவினையொப்பக் கீழிற் சரிவாயும், நடுவிற் பருத்தும் பின்னர் மேற் சென்று குவிந்தும் இருப்பதைக் காணலாம். இதுவும் மிகப் பொருத்தமாகவே தெரிகின்றது. தாமரைப் பொகுட்டில் தெய்வம் வீற்றிருத்தல் போல நடுவண் பருத்திருக்குமிடத்திலுள்ள தட்டில் தெய்வங்களை அலங்கரித்து வைத்தல் மிக நயமுடைத்து. எங்கு நுழைந்து பார்ப்பினும் தமிழர்களுடைய அறிவுட மையே சிறந்து விளங்கு கின்றது. இன்னும் பூ வடிவாகவே செய்த தேர்களும் உண்டென்பர் சிலர். இக்காலத்திற்றான் இல்லையெனினும் அக்காலத்திலிருந்தமை, "தாமரைப்பூ வடிவாகச்செய்த வண்டில் அல்லது தேர் அக்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது" என தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பெரும் கதைப் படிப்பிற் குறிப்பிட்டிருத்தலால் பெறப்படுதல் காண்க.

தாமரைப்பூ வடிவினதாகிய எப்பொருளை நோக்கினு மப்பொருள் சிறந்தே விளங்கலைக் காணுந்தொறும் இம்மலரின் பெருமையை எம்மால் அளப்பரிது என்பது நன்கு புலப்படு கின்றது[1].

இனி இத்தேரின் உறுப்புக்கள் யாவை என்பதை பொதுப்பட அறிந்திருத்தல் நன்றாதலின் அவற்றையும் ஈண்டெடுத் துக்காட்டுவாம்.

**[2] தேரின் உறுப்புக்கள் :**

1. பூதப்பார் : அச்சின் மேலுள்ள பாகத்தைப் பூதங்கள் தாங்குவது போன்ற அமைப்பு.

2. கன்னிலப்பார் : முதல் வரிசை விக்கிரகங்களின் அமைப்புக்கு ஆதாரமாயமைந்திருப்பது.

3. கபோதப்பார் : விக்கிரகங்களின் மேல் அமைப்பாகவிருப்பது. கன்னிலப் பாருக்கும், கபோதப் பாருக்கமிடையில் முதல் வரிசை விக்கிரகங்கள் உண்டு.

ஆனைத்தொட்டிப்பார் : விக்கிரக வரிசையிற் சில விக்கிரகங்கள் வெளியே நன்கு புலப்படக்கூடியனவாக வைக்கப் பட்டும், சில சிறிது உள்ளே தள்ளி வைக்கப்பட்டுமிருப்பதைக் காணலாம. இவ்வாறு விக்கிரகங்கள் அமைப்பதற்கு ஆதாரமாயிருப்பது ஆனைத்தொட்டிப்பார்.

4. அச்சப்பார் : இரதத்தின் பட்டங்களை அமைப்பதற்காக விருப்பது.

5. அச்சப்பூத்தலைப்பார்: பட்டங்களை அமைப்பதற்கு மேலாக ஆதரமா யுள்ள பார்.

6. பூத்தலைப்பார்: மகரக் காய்கள் பூட்டிய பூத்தலைகளை உடையது.

---

1. தாமரைப்பூ – வெள்ளவத்தை குல சபாநாதன். – ஈழகேசரி.
2. திரு. எஸ். குமாரசுவாமி ஆசாரியார் அவர்களிடம் பெற்ற குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.

**7. இரண்டாவது நிலம்:** முதலாவது வரிசை விக்கிரகங்களுக்குப் பின் இரண்டாவது வரிசை விக்கிரகங்கள் இதிலுண்டு. உட்பக்கம் ஆனைத் தொட்டிப்பார் சேர்த்து விக்கிரகங்கள் உள்ளும் புறமுமிருந்து புலப்படக் கூடியனவாய் அமைந்துள்ளன. இதற்கு அசுவதைப்பார் என்றும் பெயர்.

**8. சிம்மப்பூத்தலைப்பார்:** சிம்மத்தின் உருவத்தையும், பூத்தலையையுங் கொண்டு இணைத்த அமைப்பு.

**9. மூன்றாவது நிலம் :** உட்பக்கக் கோணங்களையுடைய ஆனைத் தொட்டிப்பார் இணைத்து வெளித் தோற்றத்தில் விக்கிரகங்கள் அமைத்துச் செய்யப்பட்டது.

**10. நாகத்தலைப்பார் :** இது நாக பந்தம் மாதரி உள்ள தலைப்புடன் கூடியது.

**11. விஸ்தாரப்பார்:** இரதத்தின் விஸ்தீர ணத்தைக்குறிக்கின்றது. இந்தப்பாகத்துக்கு மானவாசனம்என்றும்பெயர்.

**12. தேவாசனம்:** தேவர்கள் அம்பாளை நின்று தரிசிக்கும் இடம் என்ற முறையில் அமைக்கப்பட்டது.

**13 சிம்மாசனம் :** தேவி வீற்றிருக்கும் ஆசனம்.

**14. கம்பங்கள்:** சித்திர வேலைப்பாட மைந்த குத்துக்கால்கள்.

**15. பண்டிகை :** முதற் பண்டிகை, இரண்டாம் பண்டிகை, மூன்றாம் பண்டிகை.

**16. கர்ணக் கூடம்.**

**17. மணிமுடி :**

மரத்திலே சித்திர வேலை செய்வதில் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதை ஸ்ரீமதி ஆர். எஸ். ருக்மணி மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். அது பின்வருமாறு:

"பல நூற்றாண்டுகட்கு முன் நமது நாட்டினர் மனைகளையும், மாட மாளிகைகளையும், அரண்மனை களையும், சுட்ட மண்ணாலும் மரத்தாலும் கட்டினர். அந்நாட்களில் தமிழகத்தின் பெரும் பாகமும் காடுகளாகவே இருந்தன. அக்காடுகளில் கருங்காலி ஆச்சாதேக்கு முதலிய மரங்கள் செழித்தன. அம்மரங்கள் செதுக்கு வேலைக்கு பொருத்தமானவை. வைரம் வாய்ந்தவை; உரமானவை. கட்டடங் களின் சுவர்களிற் காரையாற் சித்திர வேலைகளை வெகு அழகாகச் செய்தார் கள். அக்காலத்தில் வழக்கில் இருந்த கிளிஞ்சிற் சுண்ணாம்பு சித்திரப்பூ வேலைகளுக்கும், பல வகை உருவங்கள் சமைப்பதற்கும் வெகுவாகப் பொருந் தியது. அக்காலத்து மரத்தச்சர் பதுமை களையும், மலர்களையும், சித்திரங் களையும் மரத்திற் செதுக்குவதிலே தேர்ந்திருந்தனர். உத்தரங்களிற் சிறந்த பூக்கோலங்கள் செதுக்குவதில் அவர் பெரிதும் திறமை வாய்ந்தவர். அத்தச்சர்கள் தூண்களிலும், சுவர்க ளிலும், வாயிற் கதவுகளிலும், கதவு நிலைகளிலும் விமானங்களிலும், உத்தரங்களிலும், தூண்களின் போதிகளி லும், குறுக்கு விட்டங்களிலும் தம்சிற்பத் திறங்களைக் காட்டினர். அக்காலத்துக் கோயில்களுக்குச் சொந்தமாகப் பெரிதும் சிறிதுமான தேர்களும், யாளி, பரிமா, அன்னம், கரிமா, மயில் முதலிய ஊர்திகளும் இருக்கும். கோயிலுக்குரிய இத்தேர்களிலும், ஊர்திகளிலும் சிற்பிகள் தமது ஆற்றலும், வேலைப் பாடும் விளங்க எழிலொழுகும் எண்ணற்ற சிற்பங்களைப் படைத்துப் புகழ் பெற்றனர்.

மரத்தச்சர் காட்டிய சிற்பத் திறமைகளை எல்லாம் மகேந்திரவர் மனது காலமுதற் கற்றச்சரும் கல்லிலே காட்டத் தொடங்கிவிட்டனர். மூலத் தானத்திற்குமேல் அமையும் விமானமும்

சூரியதாய் எழுகின்ற கோபுரமும் அமைப்பது மிகப் பழைய மரபு. இம்மரபின்படியே பல்லவரது காலத்திலுந் தமிழகச் சிற்பிகள் ஒரே கல்லைச் செதுக்கிக் குடைந்து கோயில்களை அமைத்தனர். இவை மரத்தச்சர்கள் செய்த இரதங்களின்வடிவிலே இருந்தன"[1].

**ஈழநாட்டில் :**

"நம்முடைய ஈழ நாட்டிலும் பழைய தேர்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட சித்திரங்கள் நிறைந்த மரத்தேர்கள் பல காணப்படுகின்றன. மாவிட்டபுரம், பறாளை, சுதுமலை முதலிய இடங்களிலுள்ள தேர்களின் சித்திரங்கள் ஒத்த அழகும் அமைப்பும் பொருந்தியனவாய் விளங்குகின்றன."[2]. மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயிலில் உள்ள தேரும், பறாளையில் உள்ள தேரும் ஒரே காலத்தன என்றும் அவை சண்முகசேகர முதலியார் என்ற பிரதானி ஒருவராற் செய்யப்பட்டனவென்றும் என் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மருதடி விநாயகர் கோயில் முதலிய ஆலயங்களிலுஞ் சித்திர வேலைப்பாடமைந்த தேர்கள் உண்டு.

இத்தகைய கீர்த்தி வாய்ந்த தேர் வரிசையில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தேர் முக்கிய இடம் வகிக்கும் என்பதற்கையமில்லை. இந்த அழகிய தேரைப் பார்க்கவே பலர் நயினாதீவுக்கு யாத்திரை செய்வர் என்று அவுஸ்ரேலிய மரவேலை நிபுணர் திரு.ஹீவற் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தேர் வேலை நடைபெற்றிருக்கும் பொழுது கண்டுமகிழ்ந்த இவ்வறிஞர் இத்தொழிலாளரை மனமாரப் புகழ்ந்துள்ளார். அவர் அளித்த நற்சாட்சிப் பத்திரம் இது.

1. இந்தியச் சிற்பங்கள் - ஆர். எஸ். ருக்மணி
2. இலங்கையிற் கலை வளர்ச்சி - க. நவரத்தினம்

நன்றி : நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோவில்
தேர்த்திருப்பணிச்சபை மலர் - 1957


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**




கண் வைத்திய நிபுணர்கள் :
Dr. ச. குகதாசன். 021-2223645
Dr. சிவந்தா. 021-2223149
யாழ். போதனா வைத்தியசாலை

தொடர்புகளுக்கு:
**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி :
**021-2226550**

# கலாகேசரியும் தேர்ச் சிற்பக்கலையும்

திரு. வே. அம்பிகைபாகன், B.A (Hons). அவர்கள்

தமிழகத்தைச் சேர்ந்த திருவிடை மருதூர் சி. சுப்பிரமணியம், சென்னை எஸ். குமாரசுவாமி, இரா. கோவிந்தராஜூ, மாயவரம் ச. ஏகாம்பரம் போன்ற ஸ்தபதிகள் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த இருபதாம் நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் உருவாகிய யாழ்ப்பாணத்துத் தேர்க் கலைஞர்களிற் பலரும் அவர்களின் செல்வாக்கிற்கு உட்பட்டோராக விளங்கினர். ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதாம் ஆண்டளவில் தமிழகம் சென்று சிற்பக் கலையிற் பயிற்சி பெற்று வந்து, வண்ணை வீரமாகாளி அம்மனுக்குத் தேர் அமைத்து ஓர் புதிய எழுச்சியை ஏற்படுத்தியவர் மட்டுவில் வி. ஆறுமுகம் ஆச்சாரியார். முழுவதும் தமிழகமயமாகியிருந்த அறுபதுகளின் மத்தியில் 'கலாகேசரி' என்ற ஐந்தெழுத்துச் சுட்டும் ஆற்றல் மிக்க ஆறுமுகம் தம்பித்துரை ஈழத்துத் தேர்க்கலை உலகிற் பிரவேசிக்கிறார். இவர் மேற்குறித்த ஆறுமுகத்தின் தலைமகனும் பிரதம மாணவனுமாவார்.

கலாகேசரியின் உருவாக்கம் பன்முகம் கொண்டது. தேர்க்கலையைப் பொறுத்தளவில் இவர் தன் குருவாகத் தந்தையாரையே குறிப்பிடுகின்றார். இருப்பினும் அவரிடமிருந்து பெற்றது மிகவும் குறைந்தளவிலான செய்ம்முறையறிவே. சிற்ப வடிவமைப்பிற்குத் தேவையான ஓவிய வரைதலை நெறிப்படுத்திய பரமேஸ்வராக் கல்லூரி ஓவிய ஆசிரியர் செ. சண்முகநாதனும், "வின்சர் ஆர்ட் கிளப்," நிறுவக நெறியாளர் எஸ். ஆர். கனகசபையும் பரந்ததும் உயிர்த்துடிப்புள்ளதுமான கற்பனை உலகிற் கலாகேசரியை உலாவ வைத்தோராவர்.

சிற்பக் கல்விக்கு இன்றியமையாத வட மொழியை சீதாராம சாஸ்திரியிடம் கற்ற கலாகேசரி தமிழகத்திலிருந்து வருகை தந்து மாவிட்டபுரத்திற் கருங்கற் பணியாற்றிய சிற்பி பெரியசாமியிடம் "மானசார சிற்ப சாஸ்திரம்" பயின்றார். இவர் பெற்ற பெரும் பேறு என்று இதனைக் குறிப்பிடலாம். சிற்ப நூல்களிற் சிறந்த மானசாரத்தின் சில பகுதிகளை நுட்பதிட்பமாக அறிந்து கொண்ட கலாகேசரி, யாழ்ப்பாணத்துக் கலைஞர்களில் மிகவும் தகைமையுடையவராகத் தன்னை வளர்த்துக் கொண்டவர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சித்திர ஆசிரியராக 1955இல் நியமனம் பெற்ற இவர் 1956இல் "கலை இந்தியா" அடங்கலுமான ஒருமாத காலக் 'கல்வி, கலாசார சுற்றுப்பயணம் செய்து புராதன கலைச் சிறப்பை அறிந்து கொண்டார. 1968ஆம் ஆண்டு வடமாநிலச் சித்திரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார் கலாகேசரி.

ஆகம, சிற்ப நூலறிவும், பல கலையறிவும், மூலப் பொருட்களில் சிற்பம் அமைக்கும் ஆற்றலும் உடையவனே ஸ்தபதி என்று இந்து ஆகம மரபு கூறும். கடந்த மூன்று தசாப்த காலமாக ஈழத்துத் தேர்க்கலையுலகில் பணிபுரிந்த "ஆகம மரபு" அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு ஸ்தபதியாக விளங்கியவர் கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

தந்தையார் ஆறுமுகத்தின் மேற்பார்வையிற் குரும்பசிட்டி அம்மன் தேரை வடிவமைத்த கலாகேசரி தந்தையார் காலமாகியபின் அவர்

இயக்கி வந்த சிற்பாலயத்தை நிறுவன மயப்படுத்தினார். தன் இளவல் ஜீவரத்தினத்தை இணை ஸ்தபதியாகக் கொண்டு கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்பாள் தேரை (1966) வடிவமைத்தார். இந்நிகழ்வின் போது தான் அவருக்கேயுரிய ஆளுமையைக் குறியீடாகக் காட்டும் "கலாகேசரி" என்னும் கௌரவப் பட்டம் உயர்திரு ம. ஸ்ரீகாந்தா அவர்களால் வழங்கப் பெற்றது. நந்தாவிலிலே தோற்றம் பெறும் கலாகேசரியின் தேர்ப்பணி யாழ் பாணியில் தன்னை இனங் காட்டும் வளர்ச்சிப் போக்கில் உயர்வதை வண்ணை காமாட்சி அம்பாள் தேரில் அவதானிக்க முடியும். எண்கோண வடிவமுடைய இத்தேர் நான்கு சில்லுகள் உடையது. உபபீட அமைப் பில் ஒரு பெரு மாற்றம் தோன்றுகின் றது. சதுரவமைப்பி லிருந்து முன்னைய மரபு மாறி சித்தூர் மட்டமும் எண்கோண வடிவமெடுப்பது ஓர் புதுமை மிகு அம்சமாகும்.

கலாகேசரியின் வாழ்விலும் சரி, கலைப்பணியிலும் சரி இங்கு ஓர் முக்கிய திருப்பம் ஏற்படுகிறது. ஸ்தபதியின் பங்களிப்புப் போதியதாக இல்லையென்று குற்றம் சாட்டிய தேர்த் திருப்பணிச்சபை இந்தியாவிலிருந்து சிற்பங்களைத் தருவிக்க விரும்பியது. இதற்கு இணை ஸ்தபதியும், கலா கேசரிக்குத் தெரியாமலேயே ஒப்புதல் கொடுத்திருந்தார். இம்முயற்சியை அறிந்த கலாகேசரி ஆறுமுகம் சிற்பால யத்திலிருந்து முற்றாகவே வெளியேற வேண்டியவரானார்.

இத்தகைய பின்னணியிலேதான் நீண்ட கால வதிவிடமாகிய மயிலிட்டி தெற்கு, குரும்சிட்டியில் தன் பெயராற் "கலாகேசரி கலாலயம்" என்னும் புதிய சிற்பாலயத்தை கலாகேசரி நிறுவுகிறார். ஈழத்துத் தேர்க்கலை வரலாற்றையே மாற்றியமைத்தும் புதியதோர் அத்தியா யத்தை வகுத்தும் தேர் நெறியை ஆளும் புதிய பிரம்மாவாக மேற்கிளம்புகிறார் கலாகேசரி.

கலாகேசரி, தன் புதிய சிற்பாலயம் சார்பில் வடிவமைத்த சுதுமலை புவனேஸ்வரியம்பாள்தேர் 02-06-1974இல் வெள்ளோட்டம் கண்டது. யாழ் பாணித் தேர்க்கலை உருவமைப் பிலும் சரி, கட்டமைப்பிலும் சரி தன்நிறைவை முறையாகப் பிரதிபலிப்பது சுதுமலை யிற்றான் என்று குறிப்பிடுவதில் எதுவித சந்தேகமும் இல்லை. தனி யாழ் பாணியில் "சிற்பத்தேர்" எனச் சுட்டத் தகும் முதல்தேராகிய இது சித்தூர் மட்டம் பேரூர் மட்டம் என்னும் முதலாம், இரண்டாம் தலங்களில் 30, 32 ஆக 62 சிற்பங்கள் கொண்டது. உப பீட கீழ்த்தளமாகிய கபோதகத்து சிறு கோட்டங்களில் துவாரபாலகிகள் இடம் பெறுகின்றனர். இங்கு சுட்டத் தகும் பிறிதோர் முக்கிய அம்சம் ஆதாரசக்தி அமைப்புமுறை ஆகும். ஆதாரத்தில் தேராதார சக்திகளாகிய ஆதிகூர்மம், பூமாதேவி, ஆதிநாகம் என்பன தேரைத் தாங்கும் பாவனையில் அமைகின்றன. தலைப்பாகம் முன் புறமும், காற்பாகம் பின்புறமுமாக பொது வழக்கிலமைய இடம்-வலம் எனும் இரு புறங்களிலும் கூர்மத்தின் முன்னங்கால்கள் முன்பக்கமும், பின்னங் கால்கள் பின்பக்கமும் அமைவது வேறிடங்களில் கண்டுகொள்ளமுடியாத சிறப்பம்சமாகும். இது தேர் அமைப்பியல் நிறைவினைப் பிரதிபலிக்கும் ஓரம்சமாகும்.

மணிமண்டபத்தில் சிற்பச்செழுமை மிக்க அம்சங்கள் புதிதாகத் தோற்றம் பெறுகின்றன. விமானத்தைத் தாங்கும் பெரிய யாளிகளின் கீழே முன் - கீழ்ப்பார்வையுடன் இடம்பெறும்

பெரிய பாயும் சிங்கங்கள் யாளித் தூணின் பாதமாகப் புதிய வடிவெடுக் கின்றன. 'பல்லவ கட்டடச் சிற்பப் பாணி' இங்கு தேர் அமைப்பிலிடம் பெறுதல் ஒப்புநோக்குதற் குரியது. இவ்வம்சம் பிற்காலத்து யாழ் பாணியில் செல்வாக்கு செலுத்துவதைத்தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாள் ஆலயம் (1978) மாத்தளை முத்துமாரி அம்பாள் ஆலயம் (1977) என்னும் இடங்களிற் கண்டுகொள்ளலாம்.

குப்பிளான் கற்பகப் பிள்ளையார் தேர் (1975), ஈழம் அதுகாறும் கண்டி ராத வேசரமரபில் அமைந்தது. இது வட்டவடிவுடையது கலாகேசரியின் தற்திறனை வெளிப்படுத்தும் பெரு முயற்சி இதுவாகும். உபபீடம் பூசாந்தரமாகவும் அதிஷ்டானத்தி லிருந்து பிரதம கோணம் வட்டமாகவும் அமைகிறது. முறையாக "வட்டவடிவம்" எல்லாத் தளங்களிலும் பேணப்படுதல் நடைமுறையிற் சாத்தியமற்றது என்பதை உணர்ந்த கலாகேசரி வட்டத்துடன் எண்கோணத்தையும் தக்கவாறு இணைத்தார். அதிஷ்டானம் வட்ட மாகவும் பேரூர் மட்டம் எழுதகவடிவில் எண்கோணமாகவும் அமைய, நராசனத் திலிருந்து மிகுதி அடிப்படை வடிவம் முழுவதும் வட்டமாகின்றமை குறிப்பி டத்தக்கது. விமானமும் எண் கோணக் கலப்புடையதே.

குப்பிளானின் வளர்ச்சியாகக் கலாகேசரியின் புலோலி புற்றளை விநாயகர் தேர் (1980) அமைகிறது. வடிவ நிலையில் எண் கோண அம்ச குறைகள் நீங்கிய 'வேசரவடிவ முழுமை'யை இங்கு இவர் தோற்றுவித் தமை சிறப்பம்சமாகும்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேர் (1978), திராவிட மரபு நிலைப்பட்ட ஈழத்துத் தேர்க்கலை மரபில் மேலு மோர் நுட்பத்தைச் சேர்க்கின்றது. கட்டட அணி அமைப்பில் 'முகபத்திர' மடக்கை மீட்பு ஒன்று முந்திய தேர்கள் உத்தர மட்ட நிலையில் அமைதியாக இருக்கத் திராவிட எண் கோணத் தேரில் முதன்முறையாக முகபத்திர அமைப்பை இங்கே கையாள்கிறார் கலாகேசரி. இம்முயற்சிக்குத் தமிழகக் கலைஞர் திருவிடைமருதூர்இரா. கோவிந்தராஜாவின் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் தேர் (1966) வடிவமைப்பு ஓர் முன் மாதிரியும் உந்துசத்தியுமாகும். பிரதம வடிவம் முழுவதும் முகபத்திர மடக்கை மீட்கப்பட்ட போதிலும் தாமரை வடிவப் பண்டிகையில் இது குதிரை களால் உயர்த்திச் செல்லப்படும் குறியீடாக மட்டுமே அமைகிறது. நீர்வேலியில் இவ்வம்சம் தளத்தைப் பொறுத்தளவில் முழுமையாக இருப்பது ஒப்பு நோக்குதற் குரியது.

உபபீட கபோதகத்தில் துவார பாலகர்கள் அல்லது மூல தெய்வத்தின் முக்கிய வடிவங்கள் இடம்பெறும் முந்திய மரபுமாறி 'அட்டதிக்குப்பெண் காவற்தெய்வங்கள்' இடம்பெறுகின்றனர். இதனை மாத்தளை முத்துமாரியம்பாள் தேரில் ஏற்கனவே கலாகேசரி அறிமுகப் படுத்தியிருந்தார். திசைக் காவலர் அம்சம் தேவாசனத்தில் அமைய வேண்டும் என்பது தேர்க்கலை மரபு.

புதிய மரபை அறிமுகப்படுத்தியும் திராவிட எண்கோண மரபைச் செழுமைப் படுத்தியும் வளமூட்டிய கலாகேசரி 'அந்திரம்' என்று சிற்ப இலக்கணம் கூறும் அறுகோண வடிவைக் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேரில் அறிமுகப் படுத்துகின்றார். கலாகேசரியின் தற்றிறன் அதிகூடிய விவேகத்துடன் வெளிப்பட்டது இங்கேயென்றுதான் சொல்லுதல் வேண்டும். இருதள சிற்ப முடைய இத்தேர் ஆறு சில்லுகளும்

திரிதள விமானமும் உடையது. முகபத்திர மடக்கையைப் பிரதம கோணம் முழுவதும் கொண்டமையும் சிறப்புடையது. "அறுகோணத்திலும் தேரா?! அப்படியென்றாற் சுவாமியை எந்தப் பக்கத்தாலை ஏத்துவது?" என்று கேள்வி எழுப்பி 'பின்பக்கத்தாலை தூக்கி வைக்கட்டும்' என்று தாமே பதில் சொல்லித் திருப்தியடைந்த ஸ்தபதி களும் உளர். எண்கோணமாயின் எட்டுப் பவளக் கால்கால்கள், அறு கோணமாயின் ஆறு பவளக்கால்கள் ஒரே சுற்று வட்ட மைப்பில் வருமெனச் சிலர் தமது மூளைக்குள்ளேயே புதிய தேர் இலக்கணம் வகுத்திருந்தனர். இவர்கள் எல்லோரும் வெறும் கிளிப்பிள்ளை யாகச் செய்முறைப் பயிற்சி மட்டும் பெற்றிருந்தனரே தவிர, சிற்ப அரிச்சுவடியையேனும் 'நூன்மரபாக' அறிந் திருக்கவில்லை.

முகபத்திர பங்குமானத்தளவு கொண்டு பிரதம வாசல்கள் ஆறாகவும், ஒவ்வோர் கோண இடம் - வலம் என்னும் பகுதிகளை ஒரே தொடர்பில் இணைத்து உப வாசல்கள் ஆறாகவும், வகுத்த கலாகேசரி, பலருக்கும் 'நடுநின்ற' பவளக்காலிடத்தே சுவாமியேறும் வாசலையே தோற்றிவித்தார். வெறும் செய்முறைப் பயிற்சி பெற்ற ஸ்தபதிகள் சிலருக்கு இவ் வடிவமைப்பு இற்றை வரையிலும் விளங்கவேயில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. அவ்வளவிற்கு அதிஉயர் திறமை கொண்டு இவ் வமைப்பை உருவாக்கியவர் கலாகேசரி.

ஈழத்துத் தேர்க்கலை வரலாற்றில் சகல அம்சங்களாலும் ஓர் உயரிய எல்லையை தொட்டு நின்ற மாத்தளை முத்துமாரி அம்பாள். தேர் (1977), (1983)ஐத் தொடர்ந்த நெருக்கடியின் போது தீக்கிரையாக்கப் பெற்றமை துரதிர்ஷ்டவசமானது. நாகரம்-திராவிடம்-வேசரம் என்னும் மூன்று மரபுகளையும் பொருத்தமுற இணைத் தும் சக்தி தத்துவத்தை மணிமண்டப மேல் விதானத்தில் புகுத்தியும் ஒரு புதிய மாதிரியை இங்கே கலாசேகரி உரு வாக்கியிருந்தார்.

அமைப்பு முறைகளில் மிகவும் முன்னேறிய கோணமாக நாகரம் விளங்குகிறது. கோண்டாவில் அன்னுங்கை சிவபூதவராயர் தேரும் (1988), சுன்னாகம் கதிரைமலைச் சிவன் தேரும் நாகர வடிவிலமைவன. ஐந்து தள விமானமும் நான்கு சில்லுகளும் உடைய இவை முறையே இரண்டு, மூன்று தள சிற்பங்கள் உடையன. இருப்பினும் பின்னது மூன்றாவது தளம் பூர்த்தியா கவில்லை. "இரட்டைப் பஞ்சாங்கம்" எனப்படும் அணியமைப்பு, சுன்னாகத்திற் திறமுறப் பயன்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. சித்தூர் மட்டச் சிற்ப வரிசை செங்குத்தான முன்னைய மரபிலிருந்து மாறிச் சிறிது சாய்ந்திருப்பது ஓர் சிறப்பம்சமாகும். வட இந்தியத் தேர்களின் உருவினை இது பிரதிபலிப்பதும் குறித்துரைக்கத் தக்கதே. விமானத்தைத் தாங்கும் யாளிகள் உயிரோட்டம் நிறைந்தன. வீறும் வனப்பும் மிக்க நான்கு குதிரைகளும் இத்தேரின் கவர் திறனை மேலும் அதிகரித்து நிற்கின்றன. ஈழத்துத் தேர்களிற் சமகால வட இந்திய நாகர மரபை அறிமுகப்படுத்தி நிற்கும் தலைசிறந்த தேர் இது எனலாம்.

கலாகேசரி கடும் சுகவீனமுற்ற நிலையிலும் வடிவமைத்துப் பூர்த்தி செய்த இறுதி அமைப்பு, இணுவில் செகராசகேகரப் பிள்ளையார் தேர். இது திராவிட முக பத்திர அமைப்புடையது.

கலாகேசரியின் தேர்களிற் சில பொதுப் பண்புகளை அவதானிக்காலம். சிற்ப அணிகளாகிய அன்னம், சரபம்,

மகரம், யாளி, குதிரைகள் என்பன உயிரோட்டம் நிறைந்தன. விக்கிரகங்கள் அபிநயச் சிறப்புடையன. அதே வேளையில் 'செய்நேர்த்தி' சிறிது குறைந்திருக்கும். சுதுமலை, கொக்குவில் தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள ஆலயங்களிற் செய்யப்பட்ட தேர்கள் நான்கு சில்லுகள் உடையன. தேர்த் திருவிழாவிற்கு ஓடும் தேர்களுக்குத் ஆறு சில்லுகள் என்ற ஆகம சிற்ப மரபின் அடிப்படையில் நோக்கும் போது இது குறைபாடு உடையதே.

இன்று ஈழத்திற் பணியாற்றும் தேர்க் கலைஞர்களிற் பலரும் கலாகேசரியின் மாணவர்கள் ஆவர். திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ஆறுமுகம் ஜீவரத்தினம், கலாகேசரியின் பிரதம மாணவனும் இளவலும் ஆவர். தேர்க்கலையைப் பொறுத்தளவில் 'துறை சார்ந்த அறிவு' கலாகேசரியின் மாணவர்களிடம் காணப்படவில்லை, இக்குறைபாடு, இவர்களுக்கு மாத்திரமன்றி மரபு நிலைப்பட்ட குருகுல முறையில் செய்முறைப்பயிற்சி பெற்று உருவாகும் அனைத்து மாணவர்களுக்கும் பொது வானதோர் அம்சமே என்பது குறிப் பிடத்தக்கது.

தொகுத்து நோக்கும்போது தேர் வடிவமைப்பிலும் தேர்ச் சிற்ப வடிவமைப்பிலும் மாத்திரமின்றிச் சிற்ப இலக்கணங் கற்றுத் 'துறைசார்ந்த அறிஞர்' என்று உயரிய நிலையிற் செயற்பட்டவர் கலாகேசரி என்பது தெளிவாகின்றது. ஈழத்திற்கு வருகை தந்த இந்தியக் கலைஞருடன் இணை நிற்கும் ஆற்றல் பெற்ற கலாகேசரி, யாழ்ப்பாணத்துத் தேர்க் கலையுலகில் 'ஆகம மரபு அங்கீகரித்த ஒரேயொரு தேர் ஸ்தபதி' என்பது விதந்து போற்றுதற்குரியது.

## பிரதோஷ காலங்களில் வலம் வரும்போது கவனிக்க வேண்டியவை

✳ பிரதோஷ காலங்களில் கோமுகம் அருட் சக்தியின் வடிவாக விளங்குவதால் சிவனருளைப் பெற கோமுகங்களை பக்தியுடன் வணங்கவேண்டும்.

✳ ஒரே பிராகாரம் கொண்ட சிறிய ஆலயங்களில் பிரதான நந்தி லிங்கத்தின் அருகிலேயே இருக்கும். ஆதலால் மேல் குறித்த வகையில் வலம் செய்வது எளிதாகும். பெரிய ஆலயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பிராகாரங்கள் இருக்கும். பிரதான நந்தி , கொடிமரம், பலிபீடம் ஆகியன சற்றுத் தள்ளியிருக்கும். ஆகையல் உட்பிராகாரத்தில் அமைந்துள்ள (சக்தி நந்தி அல்லது விஷ்னு நந்தியை பிரதான நந்தியாக எண்ணி வலம் செய்ய வேண்டும்.

✳ சோமசூத்திரப் பிரதட்சணம் சிவபெருமானுக்கு மட்டுமே உரியது. இந்த வலம் செய்யும்போது அம்பிகை சந்தி உள்ளே அமையுமானால் அதையும் சேர்த்து வலம் வரலாம். அப்படி இல்லா விட்டால் சிவசந்நிதியை மட்டும் வலம்வந்து பிறகு வழக்கம்போல எல்லா சந்நிதிகளையும் மொத்தமாக வலம் வரலாம்.

✳ இடதுபுறம் சென்று சண்டீசரை வணங்கிவிட்டு திரும்பவேண்டும் என்று கூறுகின்றது சண்டீசரை வணங்குவதுடன் கோமுகியையும் வணங்கவேண்டியது முறையாகும்.

# துர்க்கை அம்பாளுக்கு அமைத்தார் அழகுறு திருமஞ்சம்

திரு. சிதம்பரநாதன் சஜீவன் அவர்கள்
மாவிட்டபுரம்

அல்லல் அகற்றி ஆனந்தம் அளிக்கும் வல்லாள் துர்க்கையவள். கொற்றவையாய்க் கோயில் கொண்டெழுந்து அருள் பாலிக்கின்ற புண்ணிய திருப்பதி தெல்லிப்பழைப் பதி. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தலம் ஆன்ம ஈடேற்றத்திற்கான வாசற் தலமாக அமைவு பெற்றுள்ளது.

சதா இயந்திர வாழ்வில் இயங்கிக் கொண்டிருக்கின்ற மானிடர்களை இறை சிந்தனையின்பால் கவர வைப்பது வெறும் ஆலயச் சிலைகள் மட்டுமல்ல ஆலயமும், அதன் அமைப்பும் அது அமைந்துள்ள சூழலும் ஆங்கே அமைவுபெற்ற கலை அம்சங்களும் என்றால் அது மிகையாகாது.

பண்டைக் காலந்தொட்டே ஆலயங்களை நிலைக்களமாகக் கொண்டு கலைகள் வளர்ச்சியடைந்தன. அந்த வகையில் தெல்லிநகர் துர்க்கை அம்மன் ஆலயமும் கலையை வளர்க்கும் அருங் களமாகவே மிளிர்ந்து கொண்டிருக் கின்றது.

ஆய கலைகள் அறுபத்து நான்கில் அழகுக் கலைகள் எனச் சிறப்பிக்கப் படும், கட்டடக் கலை, சிற்பம், ஓவியம், இலக்கியம், இசை, நடனம், நாடகம் என்பன துர்க்கை அம்மன் ஆலயத்தில் தாண்டவமாடுகின்றன. அந்த வகையிலேதான் இவ் ஆலயத்தின் அழகுக் கும், அருளிற்கும் வலுச் சேர்க்கும் வகையில் உருவாகும் எழில்மிகு திருமஞ்ச வெள்ளோட்ட நிகழ் வினூடாக உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்,

வந்தோரை வரவேற்கும் வலிவடக்கு பிரதேசத்தில் மாவிட்டபுரம், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளுக்குத் தனிச் சிறப்பு காணப்படுகின்றது. கைத்தொழில் வல்லுநரும், முத்தமிழ் வாணரும் வாழ்ந்த பூமி என்பதாலோ என்னவோ? விஸ்வபிரம்ம வழித்தோன்றல்களாகிய ஆசாரி பரம்பரையை ஆதரித்து வாழ்த்தி வளர்த்து வருகின்ற பெருமை இப்பகுதிகளுக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் உரித்துடையது.

ஆதாரம் என்ன? என்று நீங்கள் நினைக்கலாம். சுருங்கச் சொன்னால் "தேவஸ்தான ஸ்தபதி" "ஆஸ்தான ஸ்தபதி" என்கின்ற மரபு நீடித்து நிலைக்கின்ற தன்மை மட்டுமல்லாது அந்த ஆசனத்திற்குரிய சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொள்கின்ற பெருமையும் இந்த ஆலயத்திற்கு உண்டு. ஆஸ்தான ஆசாரியராக அமரர் கந்தப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் சேவை புரிந்ததும் இங்கே நினைக் கப்பட வேண்டியது. இன்றைய தேவஸ்தான ஸ்தபதி விஸ்வப் பிரம்மஸ்ரீ செல்லையா பாலச்சந்திரன் அவர்களின் எண்ணத்திலும், கை வண்ணத்திலும் உருவாகிய இந்தத் திருமஞ்சத்தின் வனப்பு, கலை, வளர்ச்சியையும் ஆஸ்தான அம்சங்களையும் கட்டியங் கூறி நிற்கின்றது.

புதுமைகள் பொலியும் புத்தூரில் பிறந்து, திருநெல்வேலி கந்தசாமி

ஸ்தபதியார் அவர்களிடம் கலை பயின்று கலாகேசரி ஆ. தம்பித்துரையின் ஊடாக ஆலயத்தில் அடைக்கலமானவர்தான் ஸ்தபதியார் பாலச்சந்திரன் அவர்கள். எத்தனையோ ஆலயங்களுக்கு ரதங்கள், வாகனங்கள், மஞ்சங்கள், தங்க ரதங்கள் என அமைத்து சிற்பத் துறையில் தனி முத்திரை பதித்து அண்மையில் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்களின் கரங்களால் "ரதகலாஞானி" என பாராட்டுப் பெற்ற செ. பாலச்சந்திரன் அவர்களும் அவருடைய 'வலது கரம்' எனப் போற்றப்படும் சுழிபுரம் மயில்வாகனம் இரத்தினம் அவர்களின் ஏனைய உறவினர்களும் இணைந்து இராப்பகல் பாராது செய்த பெருஞ் சேவையால் இன்று எழிலுற கம்பீர மாகக் காட்சியளிக்கின்றது இந்தத் திருமஞ்சம்.

சிற்ப சாஸ்திர ஆகம விதிமுறை களுக்கு உட்பட்டு கலை அம்சமும், அழகும் வெளிப்படத் தத்ரூபமான படைப்பாக பார்ப்போரை வியக்க வைக்கும் வகையில் உருவாக்கப் பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

25 அடிக்கு மேலான உயரத்தோடு ஒரு திருமஞ்சம் அமைவதென்பது சுலபமான விடயமல்ல ஆனாலும் அவ்வளவு உயரம் பொருந்திய அந்தத் திருமஞ்சத்தை முழுக்க முழுக்க எழில் கொஞ்சும் சிற்பங்களால் அலங்கரித்த விதம் வர்ணிக்க முடியாததொன்று.

அடித்தட்டிலிருந்து மேல் விமானம் வரை ஒவ்வொரு அடுக்குகளும் ஒய்யாரமாக காட்சியளிக்கின்றன.

போதிகைத் தலைகள், பார்விதா னங்கள், துவார பாலகி, சிம்மவாகினி போன்றோரைத் தாங்கிய அடித்தட்டில் சிறந்த அடித்தளத்தை இட்டு வைக்க மகர அடுக்கு வரியும், சிம்மம், கஜம், சர்ப்பம் முதலான அட்ட வர்க்கமும் ஏந்து போதிகளைத் தாங்கிய வரியும் பார்த்தோரை கவர வைக்கின்றன.

அன்னை அமரும் பீடமும் அதைச் சுற்றி யாளிகள் அன்னங்கள் தாங்கிய பவளக் கால்களும் மஞ்சத்தில் முக்கிய ஸ்தானத்தை அலங்கரிக்கின்றன.

அவற்றையெல்லாம் மகுடம் வைத்தாற்போல் தென்துருவர், மகாநாசி போன்றவர்களின் விக்கிரகங்களை சுமந்தவாறு அழகிய வேலைப்பாடுகளுடன் மிளிர்ந்து கொண்டிருக்கும் மேல் விமானப் பகுதியும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். ஆங்காங்கே மின்னு கின்ற நாகதலை, யானைத் தலை, சிம்மத் தலை, அன்ன வேலைப்பாடுகள், புராண இதிகாசங்களை நினைவு படுத்துகின்ற விக்கிரகங்கள் இவை எல்லாம் மஞ்சத்தின் கலை வண்ணத்தின் உச்சத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அண்டமெல்லாம் கரந்தும், காத்தும், அருள் சுரந்தும் விளையாடும் அன்னைக்கு அண்டப் பொருள்களை ஆங்காங்கே கொண்டுவந்து புகுத்தி அருமையான வகையிலே இம்மஞ்சம் அமைவு பெற்றுள்ளது.

இம்மஞ்சத்தில் மிளிரும் கலை அம்சங்கள் மட்டுமன்றி இம்மஞ்சத்தின் உறுதிப்பாடும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும். பொழி, கழுந்து, முறி என்பவற்றின் அடுவை (கலைச் சொற்கள்) இம் மஞ்சத்தின் உறுதிக்கும், நிலைப்பிற்கும் மூலமாக காணப்படு கின்றது. கூடவே இரும்பு வேலையும், வர்ணவேலையும் மஞ்சத்தின் மகிமைக்கு வலுச்சேர்க்கின்றன.

சுருங்கச் சொன்னால் ஆயிரம் எண்ணச் சிறகுகள் வட்டமடித்து பறுப்பதுபோன்ற மாயா உலகில்

வாழும் மனிதர்களை ஒருகணம் நினைக்க வைத்து, இறைவியைச் சிந்திக் வைத்து, கலையை ரசிக்க வைக்கும் அரும் பொக்கிசமாக மிளிர்கின்ற இம்மஞ்சத்தை உருவாக்கிய ஸ்தபதியார், அவரின் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்த அமரர் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார், இன்றைய தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் மற்றும் ஆலய பரிபாலன சபையினர், உழைத்த கலைஞர்கள் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள், வாழ்த்தப்பட வேண்டியவர்கள். அவர்கள் பணி தொடர வேண்டும். அழகிய மஞ்சத்தில் அன்னை வரும் அழகுக் கோலத்தை கண்டு இன்புற வேண்டும். எல்லாம் வல்ல அன்னையின் திருவருள் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என வேண்டி அமைகின்றேன்.

### உமாபதி சிவாச்சாரியார் அருளிய

# கொடிக்கவி

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம் ஒன்றுமேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராம்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள்கூடும்படிக் கொடி கட்டினனே. 1

பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது - அருளாளா
நீபுரவா வையமெலாம் நீ அறியக்கட்டினேன்
கோபுர வாசற் கொடி. 2

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள்நல்கக் கொடி. 3

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி. 4

## சேந்தனார் அருளிய

# திருப்பல்லாண்டுப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும்என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநிழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 3

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூடிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 6

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 7

சேலுங் கயலுந் திளைக்கும்
கண்ணார்இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 8

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று)அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 10

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தை எந்தாய் சுற்ற(ம்) முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே. 13

*திருச்சிற்றம்பலம்*

# திருமஞ்சத்தின் மகிமை

கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி அவர்கள்
தலைவர், நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இந்துக் கோயிற் பாரம்பரியத்தில் இறைவன் மஞ்சத்தில் அமர்ந்து வருதல் சிறப்புற்சவங்களில் ஒன்றாகும். கோயிற் பண்பாட்டில் மஹோற்சவம் பிரதான இடத்தைப் பெறுகின்றது. இது பிரம்மோற்சவம் எனவும் அழைக்கப் படும். ஆகமம் கூறும் மரபுப்படி மஹோற்சவம் வருடந்தோறும் நடை பெறும் நைமித்தியக் கிரியை ஆகும். நைமித்தியக் கிரியை என்பது விஷேட நிமித்தத்தின் பொருட்டு நிகழ்த்தப் படுவதாகும். ஆன்மாக்களின் உயர்ந்த குறிக்கோள் அல்லது இறுதி இலட்சியம் என்பது ஆன்மாக்கள் பிறவித் துன்பத் திலிருந்து விடுபட்டு இறைவனோடு இரண்டறக் கலத்தலாகும். இந்துமதம் கூறும் கிரியை நெறி, வழிபாடு, மெய்யியற் கொள்கைகள், கலை அழகியற் கொள்கைகள் யாவும் இந்த உயர் குறிக்கோளை அடைவதையே நோக்காகக் கொண்டவை அந்த வகையில் பிரம்மோற்சவத்தில் இடம்பெறும் திருவிழாக்கள் முக்கியத்துவம் பெறுவன. மஞ்சத்தின் தோற்றம், அமைப்பு, அதன் முக்கியத்துவம், அழகியல் அம்சம் போன்ற பல்வேறு விடயங்களை இக்கட்டுரை கருத்திற் கொள்கிறது.

**மஞ்சத்திற்குரிய இடம் :**

யாழ்ப்பாணக் கலை கைவினைப் பாரம்பரியத்தில் பண்பாட்டை வெளிப் படுத்துவதில் நுண்கலைகள் முக்கியத் துவம் பெறுவதுபோன்று கைவினைக் கலைகளும் முதன்மை பெறுகின்றன. மரச்செதுக்கல் வேலைப் பாடுகளில் தேரைப்போன்று மஞ்சமும் அழகிய வேலைப்பாடுகளைஉடையதாகக்காணப் படுகிறது. இச்செதுக்கல் வேலைப் பாடுகள் கைவினைஞர்களது வினைத் திறன். தொழில்நுட்பம், செய்நேர்த்தி, அழகியல் உணர்வினை வெளிப்படுத்து வனவாக உள்ளன. யாழ்ப்பாணக் கோயிற் பாரம்பரியத்தில் எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி இணுவில் கந்தசுவாமி கோயில் மஞ்சம் 1904இல் பெரிய சந்நியாசியாரின் முயற்சியினால் தேவ கோட்டையைச் சேர்ந்த முத்துராக்கப்ப ஆசாரியினால் வடிவ மைக்கப்பட்டது. இம்மஞ்சத்தில் அண்டவியற்கருத்துக்களும்பௌராணிகக் கருத்துக்களும் சிற்பங்களாக இடம் பெறுகின்றன. மஞ்சத் திருப்பணி நடந்த இடம் மஞ்சத்தடி என்று பெயர் பெற்றது. 1908 அளவில் மஞ்ச சிற்ப வேலைப்பாடுகள் முடிவடைந்ததாக அறியப்படுகின்றது. (இணுவை அப்பர் பக்.98). மஞ்சம் சென்ற வீதி மஞ்சத்தடி வீதி என்று அழைக்கப்பட்டது. அன்றைய மஞ்சத் திருவிழாவில் ஆட்டக் காவடிகள், நாட்டுக் கூத்துப் போன்றன இடம் பெற்றதாக அறிய முடிகின்றது. (இணுவை அப்பர் பக்.99). இது தென்னிந்தியச் சிற்பிகளின் கைவினைத் திறனையும் பெரிய சந்நியாசியாரின் அருட்திறனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. எவ்வாறாயினும் 100, 105 வருட காலப் பழமையே மஞ்சத்திற் குண்டு. மஞ்சம் பற்றி ஆகமங்களிலோ சிற்ப சாஸ்திரங் களிலோ குறிப்புக்கள் காணப்படவில்லை.

கோயிற் பிரம்மோற்சவத்தில் முக்கியத்துவம் பெறும் திருவிழாக்களில் முதல்நாள் துவஜாரோகணம் (கொடியேற்றம்) இடம் பெறுகின்றது. இது படைத்தற் தொழிலைக் குறிப்பதாக உள்ளது. உற்சவ காலங்களில் தினந்தோறும் அக்கோவிலில் இடம் பெறும் பிரதான கடவுளும், இறைவியும் வாகனத்தில் உலாவருவது வழக்கம். அவ்வாறு உலாவருதல் இறைவனது காத்தற் தொழிலைக் குறித்து நிற்கின்றது. ரத உற்சவம் ஆன்மாக்களின் வினைகளை அழித்தலைக் குறித்து நிற்கின்றது. தீர்த்தோற்சவம் ஆன்மாக்களுக்கு அருளுதலைக் குறித்து நிற்கின்றது. மஞ்சம் இந்த வகையில் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றுடனும் தொடர்பு படுத்தப் படவில்லை. மஞ்சம் என்ற சொல் இருக்கை, ஒய்வெடுத்து ஒய்யாரமாக உட்காரும் இடமாகக் கருதப்படுகிறது. சற்று ஓய்வாக, ஆறுதலாக அலங்காரங்களுடன் இருக்கும் இடமென்று சொல்லலாம். மஞ்சம் இரவிலே இழுக்கப்பட வேண்டியது என்றும் அது சந்திரனைக் குறிப்பதாகவும் கொள்ளப்படுகின்றது.

**மஞ்சத்தின் பொது அமைப்பு :**

மஞ்சத்தின் அடித்தளம் பூசாந்தர வடிவமாகச் செய்யப்படும். இதற்கு மேல் பவளக்கால் இடம்பெறும், இதில் யாளி வேலைப்பாடுகள் இடம் பெறுவது வழக்கம். மேற்றளத்தில் உட்புறத்தில் பந்தல் வேலைகள் இடம்பெறும். இது சொக்கட்டான் பந்தல் அமைப்பில் பலகையில் வடிவமைப்புச் செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டிருக்கும். மேற்தள வெளிப் பகுதியில் எழுதகம் இடம்பெறும். வரிவரியாக ஒரு இஞ்சி கனம் உள்ள மரக்கட்டைகளால் இது அமைக்கப்படும். இதுவும் பூசாந்தர வடிவமாகவே இருக்கும் இதற்குமேல் சுவர்ப்பலகை இடம்பெறுகிறது. இதன் மேற் கர்ண கூடுகள் இடம்பெறும். இவை ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் வாசல் வைத்துச் செய்யப் படும். இதற்குமேல் பண்டிகை இடம்பெறும். பண்டிகையின் மேல் கலசம் இடம்பெறும். மஞ்சத்தில் இரு பக்கமும் திருவாசி வைக்கப்பட்டு நாசித்தலை இடம்பெறுவது வழக்கம்.

மஞ்சத்தின் அடித்தளத்தில் சில்லுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் சில்லுகளை இணைக்கும் நட்டுப்பார் தளம் இடம்பெறுகிறது. இதற்குமேல் வானவரி, பூசாந்தர வரி, போதியல் வரி, விக்கிரகவரி போன்றன இடம்பெறுகின்றன. முன் புறத்தே குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். குதிரைகள் அமைந்துள்ள பகுதிக்கு மேல் வியாழவரி, தேங்காய்த்தடைச்சட்டம் இடம்பெறும் (அர்ச்சனைத்தேங்காய் விழாதவாறு அமைக்கப்படும்). அதற்கு மேல் தேவாசனம், சிம்மாசனம் இடம் பெறும். சிம்மாசனத்தில் கடவுளர் வடிவங்கள் வைக்கப்படும். மஞ்சத்தில் மணிகள் பூட்டப்பட்டிருக்கும்.

பொதுவாக மஞ்சத்தின் அமைப்பினை சின்னத்துரை சிற்பாலய சிற்பாசாரி சின்னத்துரை நந்தகுமார் என்பவரிடம் மேற்கொண்ட செவ்வியின் அடிப்படையில் பின்வருமாறு விளங்கிக் கொள்ளாலம். மஞ்சம் 3 பகுதிகளை உடையது. முதலாவது பகுதியில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறுகின்றன.

1. சில்லுகள்.
2. அச்சு
3. நட்டுப்பார்

4. நட்டுக்கண்
5. வானவரி
6. தாளங்கவரி
7. ஒய்வுப் பலகை
8. கபோதகம்
9. போதிகை
10. ஒய்வுப் பலகை
11. விக்கிரகவரி
12. ஒய்வுப் பலகை
13. துவாலிப்புப் பண்டிகை.

இரண்டாவது பகுதியில்,

1. பவளக்கால்
2. யாளி வடிவங்கள்

இடம்பெறுவது வழக்கம். பொதுவாக எட்டுப் பவளக்கால்கள் இடம்பெறும். மூன்றாவது பகுதியில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறும்,

1. மேற்கூடு (உள்ளே பந்தல் இடம்பெறும்)
2. எழுதகவரி
3. சுவர்ப் பலகை
4. கர்ணகூடு
5. பண்டிகை
6. கலசம்

கர்ணகூடு மூலைகளிலும், மட்டங்களிலும் உயரத்தைப் பொறுத்து இடம்பெறும். பண்டிகையின் இரண்டு பக்கங்களிலும் திருவாசி வைக்கப்பட்டு அதில் நாசித்தலை உருவங்கள் இடம் பெறும்.

அடித்தளத்தில் இடம்பெறும் நட்டுப்பார் அமைப்பை நோக்கின் பிள்ளையாருக்கு ஐந்தும், முருகன், அம்மன் போன்ற கடவுளருக்கு ஆறும், சிவனுக்கு ஏழும் இடம்பெறுவதாக அறிய முடிகிறது. பெரும்பாலும் மஞ்சத்தைச் செதுக்கும் சிற்பியின் கற்பனைக்குட்பட்ட வகையில் மஞ்சத்தின் அமைப்பில் மாற்றங் களையோ, புதுமைகளோ சிற்பி கொண்டுவரலாம். கோயிற் கட்டட அமைப்பில் வசந்த மண்டபத்தைக் குறிக்கும் மஞ்சத்திற் கடவுளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாயில் அமைக்கப்படும். பெரும்பாலும் மூன்று வாயில்கள் இடம்பெறுவதைக்காணலாம். மஞ்சத்தில் இடம்பெறும் சிற்பங்கள் பெரும்பாலும் அக்கோயில் மூலமூர்த்தியின் அற்புதச் செயல்கள், புராண சம்பவங்களை விளக்குவனவாகவே அமையும். கின்னரர்கள், அப்ஸரஸர் களின்வடிவங்களும் இதில் இடம்பெறும்.

மஞ்சம் ஒரு வகையில் அழகியல் அம்சத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. கோயிற் கட்டடக் கலையில் வசந்தமண்டபம் எழுந்தருளி மண்டபம் என்றும் அழைக்கப்படும். உற்சவ மூர்த்திகளை அலங்காரம் செய்து உலாக்கொண்டு வருதல் மஹோற்சவ காலத்தில் முதன்மை பெறுகின்றது. இந்த வகையிற் சாத்துப்படி அலங்காரம் சிறப்புடையது. கோயில் உற்சவ காலத்தில் வீதியுலாவிற்கு முன் இறைவனும் இறைவியும் சாத்துப்படி அலங்காரங்களினால் நன்கு அலங்கரிக் கப்பட்டு அழகுறக் காட்சியளிப்பது வழக்கம். கோயில் வழிபாட்டில் பக்தியும் அழகும் இணைந்திருப்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இத்தகைய அலங்காரக் கலையிற் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் "அலங்கரணாசாரியார்" என்று அழைக்கப்படுகிறார். வசந்த மண்டபத்தில் உள்ள உற்சவமூர்த்திகளுக்குத் தீபாராதனை, அர்ச்சனை (சோடோபசாரம் உட்பட) தோத்திரம், திருமுறை, ஆசீர்வாதம் போன்றன இடம்பெற்று சுவாமி அத்தினத்திற்குரிய வாகனத்தில் வீதியுலாவருவது வழக்கம். மஞ்சத் திருவிழா அன்று சுவாமி மஞ்சத்தில்

எழுந்தருளி வலம்வருவார். மஞ்சத்தின் அழகும், சுவாமியின் அழகும் வழிபடுவோரின் உள்ளத்தில் பக்தி உணர்வைத் தூண்டி வழிபாட்டில் ஈடுபட வைப்பது முக்கியத்துவம் பெறுகிறது. கோயிலிற் பிரதான பகுதியான கர்ப்பக்கிருகக் காற்பிரவாய் அளவைப் பொறுத்தே அதன் ஏனைய உறுப்புக்கள் இடம் பெறுகின்றன. கட்டட அளவுகளுக்கு ஆயாதிப் பொருத்தம் பார்த்தே அமைக்கப்படுகிறது. அந்த வகையில் வசந்தமண்டப அளவைப் பொறுத்தே மஞ்சம் அமைக்கப்படுகிறது.

**மஞ்சமும் தேரும் :**

தேர் ஓடுங்கோயில் என்று அழைக்கப்படும். தேரைச் செய்வதற்குரிய விதிமுறைகளே மஞ்சத்திற்கும் பின்பற்றப்படுகின்றன. தேரும் மூன்று பகுதிகளைக் கொண்டது. தேரில் மூன்றாவது பகுியான பண்டிகை எண்கோண வளைவுடையதாகவும், யாளிக் கட்டைகள், குதிரைக் கட்டைகள், கடைச்சல் குமிழ்களைக் கொண்டதாகவும் உள்ளது.

இரண்டாவது பகுதியில் செதுக்கல் வேலைப்பாடுகள் இடம் பெறுவதுடன் விக்கிரக வரியில் விக்கிரகங்கள், மரக்கட்டைகள், அன்னக்கட்டைகள், கடைச்சல் தூண்கள் இடம்பெறுகின்றன. மஞ்சத்தைவிட தேர் செதுக்கல் வேலைப்பாடுகள் அதிகம் கொண்டதாகக் காணப்படுகிறது. தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங்களின் பெருமை உணர்த்தும் உருவங்கள் செதுக்கப்படல் வேண்டும். கீழே அதிஷ்டானத்தில் சிங்கங்கள், யாளிகள், மகரங்கள் நுணுகிய "மடிப்பு" வேலைப் பாடுகள் இடம்பெறுவன. (கா. கைலாசநாதக் குருக்கள், சைவத் திருக்கோயிற் கிரியை நெறி. பக்.98)

தேரிற் சதுரவடிவான தேர் நாகரம் எனவும், எண்கோண வடிவினது திராவிடம் எனவும், வட்டவடிவினது வேசரம் எனவும் அழைக்கப்படும். மஹோற்சவத்திற்குரிய தேருக்கு ஆறு முதல் பத்துவரை சில்லுகள் இருக்கலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு தேரின் வேதிகளின் எண்ணிக்கையும் வேறுபடும். சிவனுக்குரிய தேருக்கு ஒன்பது வேதிகைகளும் ஏனைய தெய்வங்களுக்கு ஐந்து வேதிகைகளும் கூறப்பட்டுள்ளன. (கா. கைலாசநாதக் குருக்கள். பக்.98). தேருக்கு அடித் தளமான அடிப்படையாய் விளங்கும் பகுதிகள் ஆதாரம் என்றும், உபாதாரம் என்றும் அழைக்கப்படும். இங்கு தேரின் அச்சு பொருத்தப்படும். இதற்குமேல் தளங்கள் இடம்பெற வேண்டும். ஒவ்வொன்றும் மற்றதைக் காட்டிலும் குறைந்த உயரம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் இடம்பெறுகின்றன.(கா. கைலாசநாதக் குருக்கள். பக்.98).

கோயில் உற்சவங்களிற் தேர் சூரியனைக் குறிப்பதாகவும், பகலில் இழுக்கப்பட வேண்டும் எனவும், மஞ்சம் சந்திரனைக் குறிப்பதாகவும், அது இரவில் இழுக்கப்பட வேண்டியது எனவும், அது நிலவொளியில் அழகுறத் தோற்றமளிக்கும் என்பதுவும் ஐதீகம்.

பிரமோற்சவத்தில் சப்பறமும் சிறப்புடையது. சப்பை ரதமே சப்பறம் என மருவியிருத்தல் வேண்டும். கோயிற் கட்டட அமைப்பில் கோபுரத்தை ஒத்த வடிவினதாக இது அமைகின்றமை கவனிக்கத்தக்கது.

**மஞ்சத்திற்குரிய மரங்கள் :**

மஞ்சத்தின் அடித்தளம், சில்லு, நட்டுப்பார் போன்ற பகுதிகள் பெரும்

பாலும் மருது மரத்தினாற் செய்யப்படும். சில்லுகளை இணைக்கும் பகுதியே நட்டுப்பார். இவை கனதியானவையாக இருக்க வேண்டும். ஏனைய கர்ணகூடு, பண்டிகை போன்றவை மஞ்சமுண்ணா, பலா, மகோக்கனி போன்ற மரங்களி னாற் செய்யப்படலாம். அவை கனதி குறைந்தவையாக இருத்தற் பொருட்டு அத்தகைய மரங்களினாற் செய்யப் படுவதாக சிற்பாசாரியர்கள் கூறுகின்றனர். மஞ்சத்தின் முன்னாற் பூட்டப்படும் குதிரைகள் பலா, மகோக்கனி போன்ற மரங்களினாலேயே அதிகம் செய்யப்படு கின்றன. கோயில் அமைப்பில் வசந்தமண்டபத்தில் உள்ள பீடத்தின் அளவை ஒத்ததாக மஞ்சம் அமைக்கப் படும். இந்துக்கலை மரபில் அளவைப் பிரமாணம் முக்கியத்துவம் பெறுகிறது. சிற்ப, விக்கிரகங்கள், கட்டடங்களைப் பொறுத்தமட்டில் அளவைப் பிரமாணந் தவறிய வடிவங்கள் அமங்கலமானவை. அவை வழிபாட்டிற்குரியன அல்ல. அவை நாட்டிற்கும், மக்களுக்கும் தீங்கு விளைவிப்பன என்பது சிற்ப சாஸ்திரங்களின் கருத்து. எனவே அளவைப் பொருத்தங்களுடன் கோயிலில் இடம்பெறும் கட்டடம், சிற்பம், தேர், மஞ்சம், சப்பறம் போன்ற அனைத்தும் இடம்பெறவேண்டும் என்பது விதி. விதிமுறையைப் பின்பற்றிச் செய்யப் படுவதன்மூலம் ஒத்திசைவும், அழகும் வெளிப்படுத்தப்படுகின்றன.

**கோயிற் கலைகளும் தத்துவமும் :**

கோயிற் கட்டடம் ஒரு வகையில் சிற்பம், ஓவியம் போன்ற காண்பியக் கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது. ஆகமங்கள், சிற்பசாஸ்திரங்கள் கூறும் விதிமுறைகளைப் பின்பற்றிக் கோயிற் கட்டடங்கள் அமைக்கப் படுவதுடன், கோயில் வழிபாட்டு முறைகளும் ஆகம மரபு சார்ந்ததாகவே இடம்பெறுகின்றன. இறைவனைத் தோத்திரம், நடனத்தினாலும் வழிபட முடியும் என்ற ஆகம விதியே கோயில்கள் கலைகளைப் பேணுவதற்கும், அவற்றைக் கையளிப்புச் செய்வதற்கும் காரணமாயின. இந்த வகையில் இற்றைவரை கோயில்சார்ந்த கலைகளின் வளர்ச்சியை இங்கு கவனத்திற் கொள்ளலாம். இந்துக்கள் இறைவனையே ஆடவல்லானாகவும், இசைவல்லானா கவும் கண்டுபோற்றியதுடன் இசை, நடனம் போன்ற கலைகளுக்குத் தெய்வீகத் தன்மையைக் கொடுத்தமை அவற்றை வளர்த்தெடுக்கக்காரணமாயிற்று.

கலைகளுக்கு நிலைக்களனாக அமைந்த கோயிற் கட்டடங்கள் பூமியில் தேவ உலகினைச் சிருஷ்டிப்பனவாக அமைகின்றன. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு எனக் கூறுவர். அந்த வகையிற் கோயிற் கட்டடமானது இந்து அண்டவியலை அடிப் படையாகக் கொண்டது. பஞ்சபூதங் களில் ஒன்றான பிருதுவி தனது மேற்தளத்தை கட்டடங்களுக்கு வழங்கு கிறது. இது மனிதர்களும், தேவர்களும் வசிப்பதற்கான இடம். வாஸ்து சாஸ்திர நூல்கள் தேவர்களும், மனிதர்களும் எந்தெந்த இடங்களில் வசிக்கிறார்களோ அந்தந்த இடங்கள் "வாஸ்து" என் றழைக்கப்படும் எனக் கூறுகின்றனர். வாஸ்து என்பது "வாழும் இடம்" என்று பொருள்படும். வாஸ்து புருஷ மண்டலத்தின் அடிப்படையிலேயே கோயிற் கட்டடங்கள் அமைக்கப் படுகின்றன. கோயிற் கட்டடங்களின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் புருஷனது உடலுறுப்புக்களைக் குறியீடாகக் கொண்டிருப்பவை. வாஸ்து புருஷ

மண்டலத்தின் மையப்பகுதியான பிரம பதத்திலேயே கோயிற் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. பிரம்மஸ் தானத்தை அடுத்து தெய்வீக பதம், மானுஷபதம் போன்றவை இடம்பெறு கின்றன. தேவர்களும், மனிதர்களும் சூழ உள்ள இடங்களாகவே கோயிற் கட்டடங்கள் உள்ளன. புருஷனது சிரசு, கழுத்து, மார்பு, வயிற்றுக் கீழ்ப்பகுதி, தொடை, முழங்கால், கீழ்க்கால், பாதம் போன்றன முறையே கற்பக் கிருகம், அர்த்த மண்டபம், ஸ்தபனமண்டபம், ஸ்தம்பமண்டபம், சபாமண்டபம், பிரதானவாயில், வசந்தமண்டபம், பிரதானவாயிற் கோபுரம் போன்ற கோயில் உறுப்புக்களாக வடிவமைக்கப் படுகின்றன. திருமந்திரம் இத் தத்துவத்தை அழகுற விளக்கி நிற்கிறது. 'காயமே கோயில்' என்பது இந்துக் கொள்கை நாம ரூபம் அற்ற, அகண்டாகார வஸ்துவான பரம்பொருளுக்கு எல்லை வகுத்து உறைவிடம் அமைத்து வணங்கும் வழிபாட்டில் அத்தகைய உறைவிடங்களைக் குறியீடாக உடைய தேர், மஞ்சம், சப்பறம் போன்ற வடிவங்களை அழகுற நிர்மாணித்து, அதிற்பரம்பொருளை வீதியுலாக் கொண்டு வருதலின் தத்துவம் முக்கியமானது. இவ்வாறு பரம்பொருள் வீதியுலாவரும்போது மக்கள் யாவரும் கண்டு, இன்புற்று அருள்பெற முடியும் என்ற உண்மை வெளிப்படுகின்றது. ஆன்மாக்கள் முத்திப்பேறு பெறுவதற் குத் தாம் முயலவேண்டும் என்பதுடன் இறைவனும் அருள வேண்டும் என்பது தத்துவம் இறைவனது திருவருள் இன்றி முத்தி கைவரப் பெறாது. அந்த வகையில் திருவருளைப் பெறும் வழிகளாகவே உற்சவங்கள் இடம்பெறு கின்றன.

பரம்பொருள் சத், சித், ஆனந்தம் என்ற இயல்பினை உடையது. அதன் ஆனந்த இயல்பே ஆன்மாக்களின் மீது கொள்ளும் கருணை ஆகும். ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை காரணமாகப் பரம் பொருள் தன் சக்தியுடன் இணைந்து தடத்த நிலைக்கு வந்து உருவம் தாங்கி ஆன்மாக்களுக்கு கருணை பொழியும் இடங்களாகிய கோயில்களில் வருடமொருமுறை இடம்பெறும் மஹோற்சவத்தில் மஞ்சத்தில் வீதியுலா வந்து அருள்தரும் நாளைக் கவனத்திற் கொள்வோமாக. பரம்பொருள் சக்தியின்றி இயங்கமுடி யாதது. அந்தச் சக்திக்கே கோயிலாக அமைந்த துர்க்கை அம்பாள் தேவஸ்தான மஹோற்சவத்தில் மஞ்ச விழாவில் இறைவியைத் துதித்து அருள்பெறும் நாளை வாழ்வில் பெரு நாளாகக் கொள்வோமாக.

உங்கள் அபிமான
"அருள் ஒளி"
கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

## திருமஞ்சம் உருவாக்கிய சிற்பக் கலைஞர்கள்



## திருமுறை ஏடுகள் ஊர்வலம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவியின்
திருமஞ்சத்தை உருவாக்கிய சிற்பக்கலைஞன்



சிற்பாசாரியார் திரு.செல்லையா பாலச்சந்திரன் - ஸ்தபதி
(புத்தூர் காளிகா சிற்பாலயம்)



துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்ற பன்னிரு திருமுறை முற்றோதல் விழா
பூர்த்தியின் போது ஓதுவார்கள் கௌரவிக்கப்பட்ட காட்சி.

பிள்ளையார் அச்சகம், நல்லூர்.